بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 46 & 47

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

06-13 ரபீவுல் அவ்வல் 1440 ஹிஜ்ரி கமரி 15-22 நுபுவ்வத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
15-22 நவம்பர் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

يَآيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَذَرُوۡا مَا بَقِيَ مِنَ الرِّبٰوٓا اِنۡ كُنۡتُمۡ مُّؤۡمِنِيۡنَ ○ فَاِنۡ لَّمۡ تَفۡعَلُوۡا فَاۡذَنُوۡا بِحَرۡبٍ مِّنَ اللّٰهِ وَرَسُوۡلِهٖ

நம்பிக்கை கொண்டவர்களே! இறைவனுக் அஞ்சுங்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின், வட்டியி(ன் கணக்கி)ல் எஞ்சியிருப்பதை விட்டு விடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்யவில்லையாயின், அல்லாஹ்விடமிருந்தும் அவனது தூதரிடமிருந்தும் போரை உறுதி செய்து கொள்ளுங்கள். (2:279,280)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**முஸ்லிம்களுக்கு சஹீஹ் புகாரி என்னும் ஹதீதுகளின் தொகுப்பானது மாபெரும் அருட்கொடையாகவும் பலன் அளிக்கக் கூடிய நூலாகவும் இருக்கிறது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கும் சிறப்புமிக்க நூலும் இதுவேயாகும். இவ்வாறே முஸ்லிம் என்னும் ஹதீதுகளின் சிறப்பு நூலும் மற்ற ஹதீதுகளின் நூற்களும் பெரும்பாலான ஞானங்களையும் விஷயங்களையும் கொண்ட களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் திருக்குர்ஆனுக்கு இணக்கமாக இருக்கும் ஹதீதுகள் ஆகியவற்றிற்கு மாறானவையாக இருக்கும் எந்தவொரு கருத்தும் இருக்கக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன் அவற்றின் மீது செயல்படுவது கட்டாயமாகும்**

---

**உங்களைப் பாவத்திலிருந்து விடுவிப்பதும், உங்களை இறைவன் வரை எடுத்துச் செல்வதும், உண்மையிலும் உறுதியிலும் மலக்குகளை விட உங்களை முன்னுக்கு கொண்டு செல்வதும் திட நம்பிக்கையேயாகும். திட நம்பிக்கையின் வழியைக் காட்டாத ஒவ்வொரு மதமும் பொய்யானதேயாகும். திட நம்பிக்கையின் மூலம் இறைவனைக் காட்டித்தராத ஒவ்வொரு மதமும் பொய்யானதாகும்**

---

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் [நூஹ் நபியின் கப்பல்] என்ற நூலிலிருந்து...

அவ்வாறான முன்னறிவிப்புகளைக் கொண்ட நூற்றுக்கணக்கான ஹதீதுகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை முஹத்திஸுகளின் பார்வையில் குறைபாடுள்ளவையாகவும் இட்டுக்கட்டப்பட்டவையாகவும் பலவீனமானவையாகவும் இருக்கின்றன.

ஆகவே அவற்றில் ஏதாவதொரு ஹதீது நிறைவேறிய பின்பும் இது பலவீனமானது; அதன் அறிவிப்பாளர் நம்பிக்கைக்குத் தகுதியற்றவர்; ஆகவே இதனை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம் எனக் கூறி அதனை நீங்கள் தள்ளுவீர்களென்றால் இச்செயல் உங்களின் நம்பிக்கையின்மையையே வெளிப்படுத்தும்.

ஏனெனில் இத்தகைய ஹதீது உண்மையானதென்று இறைவன் வெளிப்படுத்தியிருக்க நீங்கள் அதனை ரத்து செய்வதாக ஆகிவிடும். இவ்வாறான ஆயிரம் ஹதீதுகள் முஹத்திஸூன்களின் கருத்தின்படி பலவீனமுள்ளவையாக இருந்து பின்னர் அந்த ஆயிரம் முன்னறிவிப்புகள் உண்மையாக நிறைவேறி இருந்தால் நீங்கள் இந்த ஹதீதுகளைப் பலவீனமானவை என்று தீர்மானிப்பதன் மூலம் இஸ்லாத்தின் ஆயிரம் அத்தட்சிகளை அழித்து விடுவீர்களா? என்பதைச் சற்று சிந்தனைச் செய்து பாருங்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் நீங்கள் இஸ்லாத்தின் பகைவர்களாவே ஆகி விடுவீர்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

فَلَا يُظۡهِرُ عَلٰى غَيۡبِهٖۤ اَحَدًا - اِلَّا مَنِ ارۡتَضٰى مِنۡ رَّسُوۡلٍ

அதாவது இறைவன் தான் தேர்ந்தெடுத்த தூதரைத் தவிர வேறு எவருக்கும் தனது மறைவான ஞானங்களை வெளிப்படுத்த மாட்டான். (73:27–28)

ஆகவே உண்மையான முன்னறிவிப்பை உண்மையான தூதரின் பக்கம் அல்லாமல் யார் பக்கம் தொடர்புபடுத்த முடியும்? அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் சஹீஹான ஹதீஸை பலவீனமானது எனக் கூறுவதில் ஹதீஸ் தொகுப்பாளர் தவறிழைத்து விட்டார் எனக் கூறுவது நேர்மையான நிலைக்குப் பொருத்தமானதில்லையா என்ன? அல்லது பொய்யான ஹதீதை இறைவன் உண்மையானதாகச் சம்பவிக்கச் செய்ததன் மூலம் அவன் தவறு இழைத்திருக்கிறான் என்று கூறுவது பொருத்தமானதா?

எனவே ஒரு ஹதீது பலவீனமான படித்தரத்தைக் கொண்டதாக இருந்தாலும், அது திருக்குர்ஆனுக்கும், சுன்னத்திற்கும் திருக்குர்ஆனுக்கு இணக்கமான ஹதீதுகளுக்கும் மாறானதாக இல்லையென்றால் அந்த ஹதீதின்படி செயல்படுங்கள். ஆயினும் இஸ்லாத்தில் குழப்பத்தை உண்டு பண்ணிய பெரும்பாலான பொய்யான ஹதீதுகளும் இருப்பதால் நீங்கள் மிகவும் கவனமாய் ஹதீதுகளைப் பற்றிச் செயல்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவினரும் தத்தமது நம்பிக்கைக்கு ஏற்றவாறு ஹதீதுகளை ஆதாரமாக வைத்துக் கொள்கிறார்கள்.

எதுவரையெனில் தொழுகையைப் போன்றே தொடர்ந்து செயல்பட்டு வரக்கூடிய முக்கியமான கடமைகளையும் ஹதீதுகளின் வேறுபாடானது பலவிதமான நிலைகளை உருவாக்கி விட்டது. சிலர் தொழுகையில் உரத்த குரலில் ஆமீன் என்று கூறுகின்றனர். வேறு சிலர் மெதுவாகக் கூறுகின்றனர். சிலர் இமாமின் பின்னால் ஃபாத்திஹா ஓதுகிறார்கள். சிலர் அவ்வாறு ஓதுவது தொழுகையைக் கெடுத்து விடும் எனக் கருதுகிறார்கள். சிலர் நெஞ்சின் மீது கையைக் கட்டுகிறார்கள். சிலர் தொப்புளின் மீது

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

கையைக் கட்டுகிறார்கள். இவ்வேறுபாடுகளுக்கு உண்மையான காரணம் ஹதீதுகளேயாகும்.

كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُوْنَ

அதாவது ஒவ்வொரு கூட்டத்தாரும் அவரவர் கையில் இருப்பதைக் கொண்டு மகிழ்கிறார்கள். (23:54)

ஆனால் சுன்னத் ஒரே வழியையே தெரிவித்திருந்தது. பின்னர் அறிவிப்புகளின் தலையீட்டால் இவ்வழிமுறையானது ஆட்டங்காணத் தொடங்கியது. இவ்விதமே ஹதீதைப் பற்றிய தவறான கருத்து பெரும்பாலான மக்களை நாசமாக்கி விட்டது. ஷியாக்களும் இதே காரணத்தாலேயே நாசமாயினர். திருக்குர்ஆனைத் தங்களுக்குத் தீர்ப்புக் கூறும் நீதிபதியாக கைக்கொண்டிருந்தால் நூர் என்னும் அத்தியாயம் ஒன்றே அவர்களுக்கு ஒளியை அளித்திருக்க முடியும்.

ஆனால் ஹதீதுகளே அவர்களை நாசத்திற்குள்ளாக்கியது. இவ்வாறே ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் காலத்தில் அஹ்லே ஹதீத் என்று அழைக்கப்பட்ட அந்த யூதர்களும் நாசமாகிப் போயினர்.

சில காலமாகவே அவர்கள் தவ்ராத்தை விட்டு விட்டனர். இன்று வரை அவர்களது நம்பிக்கை இருந்து வருவது போல, ஹதீது தவ்ராத்தின் மீது தீர்ப்புக் கூறும் நீதிபதியாகும் என்பது அவர்களின் கொள்கையாக இருந்தது. அந்த ஹதீதுகளில் எதுவரை எலியா மீண்டும் தமது பூத உடலுடன் வானத்திலிருந்து இறங்க மாட்டாரோ அதுவரை அவர்களது வாக்களிக்கப்பட்ட மஸீஹும் வர மாட்டார் என்ற பெரும்பாலான ஹதீதுகளும் இருந்தன. இந்த ஹதீதுகள் அவர்களை பெரும் தவறிழைக்கச் செய்தது. அந்த மக்கள் அந்த ஹதீதுகள் மீது நம்பிக்கை கொண்டிருந்ததால் இல்யாஸ் உடைய குணத்திலும் பண்பிலும் பிரதிபிம்பமாக வந்திருக்கிறார் என்ற ஹஸ்ரத் (ஈஸா) மஸீஹுடைய விளக்கத்தை யூதர்களால் ஒப்புக் கொள்ள முடியாமற் போய் விட்டது.

ஆகவே இந்த எல்லா தவறுகளும் அவர்களின் ஹதீதுகளின் காரணத்தால் விளைந்தனவையாகும். இறுதியில் அது அவர்கள் நம்பிக்கையிழக்கக் காரணமாய் அமைந்தது. அந்த மக்கள் அந்த ஹதீதகளின் பொருளைப் புரிந்து கொள்வதில் தவறிழைத்திருக்கலாம் அல்லது ஹதீதுகளில் சில மனிதர்களின் சொற்களும் சேர்ந்திருக்கலாம்.

சுருங்கச் சொல்லின், யூதர்களில் மஸீஹை மறுத்தவர்கள் அஹ்லே ஹதீதுகளே என்பதை ஒருவேளை முஸ்லிம்கள் அறியாமலிக்கலாம். அவர்கள் (ஈஸா நபி அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் மீது கூக்குரல் எழுப்பினர். நிராகரிப்பாளன் என மார்க்கத் தீர்ப்பு வழங்கினர். மேலும் இம்மனிதன் இறைவனின் வேதங்களை ஒப்புக் கொள்வதில்லை. இல்யாஸ் மீண்டும் வருவார் என்று இறைவன் அறிவித்திருக்கையில் இவர் இந்த முன்னறிவிப்பிற்குச் சுய விளக்கம் கொடுக்கிறார். மேலும் எவ்வித சார்புச் சொல்லுமின்றி முறைப்படி அந்த விஷயங்களை தன் பக்கம் இழுத்துச் செல்கிறார் என்றெல்லாம் கூறி வந்தனர்.

மேலும் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹுக்கு காஃபிர் (நிராகரிப்பாளர்) என்று பட்டம் சூட்டியது மட்டுமல்லாமல் மார்க்கத்தை விட்டு விலகியவர் என்னும் பெயரையும் அவருக்கு சூட்டினர். மேலும் இம்மனிதர் உண்மையாளராக இருந்தால் மூஸாவின் மார்க்கம் பொய்யாகும் என்றும் அவர்கள் கூறி வந்தனர். அது அவர்களுக்கு அக்கிரமங்கள் அநீதிகளின் மோசமான காலகட்டமாக அமைந்திருந்தது. பொய்யான ஹதீதுகளே அவர்களை வஞ்சித்தன.

சுருக்கமாக, இதற்கு முன் ஒரு சமுதாயம் ஹதீதைத் தவ்ராத்தின் மீது தீர்ப்புக் கூறும் நீதிபதியாகத் தீர்மானித்து ஒரு உண்மையான நபியைக் காஃபிர் (நிராகரிப்பாளன்) என்றும் தஜ்ஜால் (பொய்யன்) என்றும் கூறி அவரை ஒப்புக் கொள்ளாமல் நிராகரிக்கும் நிலைக்கு வந்தடைந்ததை நாம் ஹதீதுகளைப் படிக்கும்போது நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும் முஸ்லிம்களுக்கு சஹீஹ் புகாரி என்னும் ஹதீதுகளின் தொகுப்பானது மாபெரும் அருட்கொடையாகவும் பலன் அளிக்கக் கூடிய நூலாகவும் இருக்கிறது.

ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்று மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கும் சிறப்புமிக்க நூலும் இதுவேயாகும். இவ்வாறே முஸ்லிம் என்னும் ஹதீதுகளின் சிறப்பு நூலும் இதர ஹதீதுகளின் நூற்களும் பெரும்பாலான ஞானங்களையும் விஷயங்களையும் கொண்ட களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் திருக்குர்ஆனுக்கு இணக்கமாக இருக்கும் ஹதீதுகள் ஆகியவற்றிற்கு மாறானவையாக இருக்கும் எந்தவொரு கருத்தும் இருக்கக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையுடன் அவற்றின் மீது செயல்படுவது கட்டாயமாகும். இறைவனைத் தேடும் அடியார்களே! உங்கள் காதுகளைத் திறந்து கேளுங்கள். யகீன் என்னும் நிச்சய உறுதியைப் போன்று சிறந்தது வேறொன்றுமில்லை. உங்களைப் பாவத்திலிருந்து விடுவிப்பதும் நீங்கள் நன்மை புரிவதற்கு உங்களுக்கு சக்தி அளிப்பதும் இறைவனின் உண்மையான நேசர்களாய் உங்களை ஆக்குவதும் திடநம்பிக்கையேயாகும்.

நிச்சய உறுதி இல்லாமல் பாவத்தை உங்களால் விட்டு விட முடியுமா? நிச்சய உறுதி என்னும் ஒளி இல்லாமல் மன இச்சைகளிலிருந்தும் நீங்கள் விலகியிருக்க முடியுமா? நிச்சய உறுதி இல்லாமல் உங்களால் மன அமைதி அடைய முடியுமா? நிச்சய உறுதி இல்லாமல் உங்களிடையே உண்மையான மாற்றத்தை உண்டாக்க முடியுமா? நிச்சய உறுதி இல்லாமல் உண்மையான இன்பத்தை உங்களால் பெற முடியுமா? உங்களைப் பாவத்திலிருந்து தடுத்து இரட்சிப்பு அளிக்கக்கூடிய நிவாரணமும் பரிகாரமும் உங்களுக்கு வானத்தின் கீழ் வேறு ஏதேனும் உண்டா? மர்யமின் மகன் ஈஸா சிந்தியதாகக் கூறப்படும் போலி இரத்தமானது உங்களைப் பாவத்திலிருந்து காப்பாற்ற முடியுமா?

கிறிஸ்தவர்களே! இப்பூமியானது துண்டு துண்டுகளாக சிதையும் வகையிலான பொய்யைக் கூறத் துணியாதீர்கள். இயேசுவும் கூட தமது இரட்சிப்பிற்காகத் திட நம்பிக்கையின் தேவையுடையவராக இருந்தார். அவர் திட நம்பிக்கை கொண்டார். இரட்சிப்பு பெற்றார். ஆனால் நாம் மஸீஹின் இரத்தத்தால் பாவத்திலிருந்து இரட்சிப்பு அடைந்தோம் என்று கூறி மக்களை ஏமாற்றும் கிறிஸ்தவர்கள் மீது நமக்கு பரிதாபமே ஏற்படுகிறது. அவர்கள் உச்சியிலிருந்து பாதம் வரை பாவத்தில் மூழ்கி இருக்கின்றனர். அவர்களது தெய்வம் யார் என்பதையே அவர்கள் அறிவதில்லை. மேலும் அவர்களது வாழ்க்கையானது அலட்சியப் போக்குள்ளதாயிருக்கிறது. அவர்களது மூளையில் மதுபான போதையானது ஏறியிருக்கிறது.

ஆனால் வானத்திலிருந்து இறங்கக்கூடிய அப்பரிசுத்தமாகிய போதையை அவர்கள் அறியாதவர்களாகவே இருக்கிறார்கள். மேலும் இறைவனோடு தொடர்புள்ள வாழ்க்கையிலிருந்து தூய்மையான வாழ்க்கையால் உண்டாகும் அதன் பிரதிபலன்களிலிருந்தும் அவர்கள் பாக்கியம் கெட்டவர்களாக இருந்து வருகிறார்கள். நிச்சய உறுதி இல்லாமல் நீங்கள் இருள் நிறைந்த வாழ்விலிருந்து மீட்சி பெற மாட்டீர்கள் என்பதையும் ரூஹுல் குத்ஸ் என்னும் பரிசுத்த ஆவியை நீங்கள் அடைய மாட்டீர்கள் என்பதையும் நீங்கள் நினைவில் வையுங்கள். நிச்சய உறுதி உடையவர்களே பாக்கியவான்களாக இருக்கிறார்கள்.

ஏனெனில் அவர்களே இறைவனைக் காண்பார்கள். சந்தேகங்களிலிருந்தும் ஐயங்களிலிருந்தும் இரட்சிப்பு பெற்றவர்கள் அருளுக்குரியவர்கள். ஏனெனில் அவர்களே இரட்சிப்பு பெறுவார்கள். திட நம்பிக்கை என்னும் செல்வம் உங்களுக்கு அருளப்படும் போதுதான் நீங்கள் பாக்கியவான்களாவீர்கள். இதன் பின்னரே உங்களது பாவங்கள் அழிக்கப்படும்.

**பாவம், நிச்சய உறுதி இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று சேரக்கூடியவை அல்ல. ஒரு பொந்திற்குள் கொடிய நச்சுப் பாம்பு இருப்பதைக் கண்ட நீங்கள் அதற்குள் உங்கள் கையை விடத் துணிவீர்களா? ஒரு எரிமலையிலிருந்து எரிகற்கள் வந்து விழுந்து கொண்டிருக்கையில் அல்லது மின்சாரம் தாக்கிக் கொண்டிருக்கும் இடத்தில் அல்லது வெறி பிடித்த சிங்கம் தாக்கும் இடத்தில் அல்லது மனித வர்க்கத்தையே அழித்து கொண்டிருக்கின்ற பிளேக் என்னும் கொடிய நோய் காணப்படும் இடத்தில் நீங்கள் நின்று கொண்டிருப்பீர்களா?**

**இவ்வாறிருக்க பாம்பு மீதும், மின்சாரம் மீதும், சிங்கத்தின் மீதும், பிளேக் மீதும் இருக்கும் அதே நம்பிக்கையானது உங்களுக்கு உங்களைப் படைத்த இறைவனின் மீதும் இருக்குமேயானால் அவனுக்கு எதிராக அவனது கட்டளைகளை மீறித் தண்டனைக்குரிய வழியை நீங்கள் கடைபிடிப்பீர்களென்பது அல்லது அவனோடுள்ள சத்திய விசுவாசத்தின் தொடர்பை முறித்துக் கொள்வீர்கள் என்பது ஒருபோதும் ஆகக்கூடிய விஷயமல்ல.**

நன்மை, நேர்மை ஆகியவற்றின் பக்கம் அழைக்கப்பட்ட மக்களே! எப்போது உங்களுடைய உள்ளங்கள் யக்கீன் என்னும் நிச்சய உறுதியினால் நிரப்பப்படுமோ அப்போதே இறைவன் மீதும் கவர்ச்சியும் உங்களிடையே தோன்றும். அப்போதே பாவத்தின் அறுவறுப்பான கறையிலிருந்து நீங்கள் தூய்மைப்படுத்தப்படுவீர்கள் என்பதை உறுதியாக நம்புங்கள். ஒருவேளை

நீங்கள் உங்களுக்கு நிச்சய உறுதி இருப்பதாக கூறிக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு கூறுவதில் உங்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நிச்சய உறுதி உங்களுக்கு ஒருபோதும் உண்டாகவில்லை. ஏனெனில் அதைச் சார்ந்த அவசியமான விஷயங்களை நீங்கள் பெறவில்லை. இதற்குக் காரணம் நீங்கள் பாவத்திலிருந்து விலகாதிருப்பதேயாகும். நீங்கள் உங்கள் பாதங்களை எவ்வாறு முன்னால் எடுத்து வைக்க வேண்டுமோ அவ்வாறு எடுத்து வைக்கவில்லை. நீங்கள் எவ்வாறு பயப்பட வேண்டுமோ அவ்வாறு பயப்படவில்லை. நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்.

**இந்த பொந்திற்குள் பாம்பு இருப்பதாக நிச்சய உறுதி கொண்ட ஒருவன் அப்பொந்திற்குள் கையை விடுவானா? தனது உணவில் விஷம் கலந்திருப்பதாக நிச்சய உறுதி கொண்ட ஒருவன் அதனை உண்ணுவானா? ஒரு புதரில் ஆயிரம் இரத்த வெறிபிடித்த சிங்கங்கள் இருப்பதை உறுதியாக அறிகின்ற ஒருவன் தன்னைப் பேணாமலும் கவனமின்மையாலும் அப்புதரின் பக்கம் கால் எடுத்து வைக்கத் துணிவானா?**

**ஆகவே உங்களுக்கு இறைவன் மீதும், தீர்ப்பு நாளின் மீதும் நிச்சய உறுதி இருக்குமானால் உங்களது கரங்களும், உங்கள் செவிகளும், உங்களது கண்களும் பாவங்கள் புரிய எங்ஙனம் தைரியம் கொள்ளத் துணியும்?** பாவமானது திட நம்பிக்கையை வெல்ல முடியாது. உங்களை எரித்துச் சாம்பலாக்கக்கூடிய நெருப்பை நீங்கள் காணும் போது அதில் நீங்கள் எவ்வாறு விழத்துணிவீர்கள்? நிச்சய உறுதியின் சுவர்கள் வானம் வரை உயர்ந்தோங்கி இருக்கின்றன. ஷைய்த்தான் அச்சுவர்கள் மீது ஏற முடியாது. பரிசுத்தம் அடைந்த ஒவ்வொருவரும் நிச்சய உறுதியினால்தான் பரிசுத்தம் அடைந்தார்.

நிச்சய உறுதியனாது துயரத்தைச் சமாளிப்பதற்கான சக்தியை அளிக்கிறது. அது எத்தகையது என்றால் அது அரசனை சிம்மாசனத்திலிருந்து அகற்றி ஒரு பிச்சைக்காரனின் ஆடையை அணியச் செய்கிறது. நிச்சய உறுதியானது ஒவ்வொரு துன்பத்தையும் எளிதாக்குகிறது. நிச்சய உறுதியானது உங்கள் இறைவனை உங்களுக்கு காட்டிக் கொடுக்கிறது. ஒவ்வொரு பாவ நிவர்த்திக் கொள்கையும் பொய்யானதாகும். ஃபித்யா என்னும் ஒவ்வொரு ஈடுசெய்தலும் பொய்யானதேயாகும். ஒவ்வொரு தூய்மையும் திட நம்பிக்கையின் வழியாகவே உண்டாகின்றது.

**உங்களை பாவத்திலிருந்து விடுவிப்பதும், உங்களை இறைவன் வரை எடுத்துச் செல்வதும், உண்மையிலும் உறுதியிலும் மலக்குகளை விட உங்களை முன்னுக்கு கொண்டு செல்வதும் திட நம்பிக்கையேயாகும். திட நம்பிக்கையின் வழியைக் காட்டாத ஒவ்வொரு மதமும் பொய்யானதேயாகும். திட நம்பிக்கையின் மூலம் இறைவனைக் காட்டித்தராத ஒவ்வொரு மதமும் பொய்யானதாகும். பழங்கதைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லாத ஒவ்வொரு மதமும் பொய்யானதேயாகும்.** இறைவன் முன்பு இருந்தது போலவே இப்போதும் இருந்து வருகிறான். இதற்கு முன்பு, அவனிடம் இருந்த வல்லமைகள் அனைத்தும் இப்போது இருந்து வருகின்றன. அடையாளங்களைக் காட்டுவதற்குரிய அதிகாரங்களும், அவனிடம் முன்பு இருந்தது போலவே இப்போதும் இருந்து வருகின்றன. அவ்வாறிருக்க நீங்கள் பழங் கதைகளின் மீது திருப்தி கொள்கிறீர்கள்?

எந்த மதத்தில் பழங்கதைகள் மட்டுமே அதன் தெய்வீக அற்புதங்களாகவும் அதன் முன்னறிவிப்புகளாகவும் இருக்கின்றனவோ அம்மதம் அழிந்து போனதாயிருக்கிறது. எந்த ஜமாஅத் மீது (எக்கூட்டத்தின் மீது) இறைவன் இறங்கவில்லையோ அக்கூட்டம் அழிந்து போனதாகும். மேலும் திட நம்பிக்கையின் வழியாக இறைவனது கரத்தால் தூய்மை அடையாத அந்த ஜமாஅத் (அக்கூட்டம்) அழிந்து போனதாகும். எவ்வாறாக மனிதன் மன இச்சைகளை உருவாக்கும் பொருட்களைக் கண்டு அவற்றின் பக்கம் ஈர்க்கப்படுகின்றானோ அவ்வாறே மனிதன் ஆன்மீக இன்பங்களை நிச்சய உறுதியின் வழியாக அடையும் போது அவன் இறைவன் பக்கம் ஈர்க்கப்படுகின்றான்.

மேலும் இறைவனிடம் அமைந்துள்ள சிறப்புத் தன்மையானவை மற்ற எல்லா பொருட்களையும் கழிவுப் பொருட்களாக அவனுக்குத் தோற்றம் அளிக்கும் வகையில் அவனைப் போதை கொள்ளச் செய்து விடுகின்றன. அவன் இறைவனைப் பற்றியும், அவனது மகத்துவம், கம்பீரம், வல்லமை, தீர்ப்பளிக்கும் நாள் ஆகியவை பற்றியும் நிச்சய உறுதியால் அறியும் அதே சமயத்தில்தான் பாவத்திலிருந்து இரட்சிப்பு பெறுகிறான்.

**எல்லா விதமான அச்சமற்ற நிலைக்கும் அடிப்படை காரணம் அறியாமையேயாகும். இறைவனிடமிருந்து உறுதியான ஞானத்தில் பங்கு பெறும் மனிதன் ஒருபோதும் அச்சமில்லாமல் இருக்க மாட்டான். ஒரு பயங்கரமான வெள்ளப் பெருக்கானது தன் வீட்டை நோக்கி வருவதாக அல்லது அவ்வீட்டின் இறுதி இடமொன்றே எஞ்சி இருப்பதைத் தவிர இதர பாவங்களையெல்லாம் நெருப்பு பிடித்து எரிவதாகவோ அறிந்த அவ்வீட்டின் உரிமையாளன் அவ்வீட்டில் ஒருபோதும் தங்கியிருக்க மாட்டான்.**

**இவ்வாறிருக்க நீங்கள் இறைவனின் தீர்ப்பளிக்கும் இறுதி நாள் மீது நிச்சய உறுதி கொண்டவர்களாக வாதம் புரிந்து கொண்டு அதே சமயம் உங்களது அபாயகரமான நிலையிலிருந்து மீண்டு வராமல் அதிலேயே எப்படி நிலை கொண்டிருக்கிறீர்கள்?**

ஆகவே நீங்கள் உங்கள் கண்களைத் திறங்கள். முழு உலகிலும் காணப்படுகின்ற அத்தெய்வீக சட்டங்களை பாருங்கள். கீழ்நோக்கிச் செல்கின்ற எலிகளைப்போல் ஆகாதீர்கள். மாறாக வானவெளியை தனக்காக விரும்பி உயரப் பறக்கும் புறாவைப் போல் ஆகுங்கள்.

**நீங்கள் பைஅத் என்னும் உடன்படிக்கை மூலம் தவ்பா (பாவமன்னிப்பு) கோரிய பின்னரும் அப்பாவத்திலேயே நிலை கொள்ளாதீர்கள். பாம்பு தனது சட்டையைக் கழற்றி எறிந்து விட்ட பின்னரும் பாம்பாகவே இருப்பது போல் நீங்களும் ஆகாதீர்கள். உங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் மரணத்தை நினைவு கூருங்கள். ஆனால் நீங்களோ இதனை அறியாதவர்களாக இருக்கிறீர்கள்.**

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 63–68)

தால்மூத்திலுள்ள ஹதீதுகளிலும் அறிவிப்புகளிலும் வெளியிடப்பட்ட சிந்தனைகள் மீது பைபிளின் புதிய ஏற்பாட்டில் மிகவும் கடுமையான ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. இந்த ஹதீதுகள் பரம்பரையாக ஹஸ்ரத் மூஸா (அலை) வரை எட்ட வைக்கப்பட்டது. இவை ஹஸ்ரத் மூஸாவின் வெளிப்பாடுகள் என்று கூறப்பட்டு வந்தன. இறுதியில் தவ்ராத்தை விட்டு விட்டு எல்லா நேரங்களிலும் ஹதீதுகளைப் படிப்பதிலேயே அவர்கள் ஈடுபடலாயினர். சில விஷயங்களில் தாலமூத் தவ்ராத்திற்கு முற்றும் மாறுபட்டதாக இருக்கிறது. அப்போதும் யூதர்கள் தாலமூத்தில் வந்துள்ளவற்றிற்கேற்பவே செயல்பட்டு வந்தனர். (தாலமூத். எழுத்தாளர், யூசுப் பார்கலி – இலண்டன் பதிப்பு 1878)

ஹஸ்ரத் ஈஸா (அலை) மீது நிராகரிப்பாளன் என்ற தீர்ப்பு எழுதப்பட்ட சமயத்தில் பவுல் என்பவனும் நிராகரிப்பாளர்களின் கூட்டத்தில் சேர்ந்திருந்தான். இந்த மனிதனே பின்னர் தன்னை 'ரஸூலே மஸீஹ்' என விளம்பரப்படுத்திக் கொண்டு பிரபலம் அடைந்தான். ஹஸ்ரத் மஸீஹின் வாழ்நாளில் இம்மனிதன் அவர்களுக்கு பெரும் பகைவனாக விளங்கினான். எந்த அளவில் மஸீஹின் பெயரில் பைபிளின் புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருக்கின்றனவோ அவற்றில் எதிலும் எனக்குப் பின் பவுல் தவ்பா என்னும் பாவமன்னிப்பு கோரிய பின் ரஸூல் ஆவான் என்னும் முன்னறிவிப்பு இடம் பெறவில்லை. இம்மனிதனின் கடந்த கால செயல்முறைகளைக் குறித்து கிறிஸ்தவர்கள் நன்றாய் அறிந்திருப்பதால் அதனை மீண்டும் நாமும் இப்போது இங்கு எழுத வேண்டிய அவசியமில்லை.

அந்தோ பரிதாபம்! ஹஸ்ரத் மஸீஹ் அந்நாட்டில் இருந்தவரை அவர்களுக்கு அதிகம் தொல்லைகள் கொடுத்த மனிதனும் இவனேயாவான். மேலும் அவர்கள் சிலுவையிலிருந்து இரட்சிப்புப் பெற்று காஷ்மீர் நோக்கி சென்ற பின்னர் அவன் ஒரு பொய்யான கனவின் மூலம் தன்னை ஹவாரிகளில் ஒருவனாக ஆக்கிக் கொண்டான்.

பின்னர் இவன் முக்கடவுள் கொள்கையை உருவாக்கினான். மேலும் தவ்ராத்தின் மூலமாக கிறிஸ்தவர்கள் மீது பன்றி இறைச்சியானது நிரந்தரமாக விலக்கப்பட்டிருந்ததை மாற்றி அதனை ஆகுமானதாக்கினான். மதுபானம் உபயோகிப்பதை பரவலாக்கினான். பைபிளின் புதிய ஏற்பாட்டின் கொள்கையில் முக்கடவுள் கொள்கையை புகுத்தினான். பித்அத் எனப்படும் இப்புதிய செயல்கள் அனைத்தும் சிலைகளை வணங்கக்கூடிய யூனானியர்களை (கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்களை) திருப்தியடையச் செய்வதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 63–68)

# ஜுமுஆ பேருரை

**தொழுகையை உண்மையான முறையில் நிலைநாட்டக் கூடியவர்கள் யார் என்றால் அவர்கள் ஜமாஅத்தாக தொழும் வழக்கமுடையவர்களும் முழுக்க முழுக்க தமது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் வைத்து தொழக் கூடியவர்களுமாவர். துஆ, பாவமன்னிப்புக் கோருதல் மற்றும் கவனத்துடன் தொழக் கூடியவர்களாவர். கவனம் இங்குமங்கும் சிதறினால் மீண்டும் தமது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வருபவர்களாவர்**

**உண்மையிலேயே அல்லாஹ் பள்ளிவாயில் கட்டக்கூடியவர்கள் மற்றும் அதன் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்கள் என்று யாரைப் பற்றி கூறியுள்ளானோ அவர்களைச் சார்ந்தவர்களாக நாம் இருக்கிறோமா?**

**இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பின் இங்கு வருபவர்கள் அல்லது இந்த பள்ளிவாயிலோடு தம்மை இணைத்துக் கொள்பவர்களின் பொறுப்புகள் முன்பை விட மிகவும் அதிகமாகி விட்டன. அதாவது இந்த பள்ளியை இஸ்லாத்தைப் பற்றிய பிரச்சாரம் செய்வதற்கான வழியாக ஆக்க வேண்டும்**

**இந்த பள்ளிவாயிலிருந்து இஸ்லாத்தின் அழகிய மற்றும் அமைதி நிறைந்த போதனை உலகின் முன் வர வேண்டும்**

**பள்ளிவாசலின் அழகு தொழுகையாளிகளோடு இருக்கின்றது**

**மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்பவனாகவும், அவன் மீது முழுமையான நம்பிக்கை வைப்பவனாகவும் இருந்தால் அவன் ஒருபோதும் வீணாக்கப்பட மாட்டான்**

**உலகத்தில் மூழ்கிக் கிடப்பது முன்னேற்றம் அல்ல. மாறாக, அது அழிவாகும்**

**ஹுஸூர் அவர்கள் நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் 21,400 சதுர அடியில் ஏறக்குறைய 8.1 மில்லியன் டாலர் செலவில் கட்டப்பட்ட பைத்துல் ஆஃபிய்யத் பள்ளிவாசலை ஃபிலடெல்ஃபியாவில் (Philadelphia–வில்) திறந்து வைத்தார்கள்**

**திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் பள்ளிவாசலைக் கட்டுவதன் நோக்கம் மற்றும் அதனை முழுமை செய்வது தொடர்பாக ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஃபிலடெல்வியாஃபில் பைத்துல் ஆஃபிய்யத் பள்ளிவாசலில் 19 அக்டோபர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اِنَّمَا يَعْمُرُ مَسٰجِدَ اللّٰهِ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ وَاَقَامَ الصَّلٰوةَ وَاٰتَى الزَّكٰوةَ وَلَمْ

يَخْشَ اِلَّا اللّٰهَ فَعَسٰٓى اُولٰٓئِكَ اَنْ يَّكُوْنُوْا مِنَ الْمُهْتَدِيْنَ

இந்த வசனத்தின் பொருள் இவ்வாறாகும். அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டு தொழுகைகளை நிலைநாட்டி ஸக்காத் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் அஞ்சாதவர் மட்டுமே அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளை நிர்வகிப்பர். இத்தகையவர்களே விரைவில் வெற்றி பெறக் கூடியவர்கள் ஆவர். (9:18)

அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் நமக்கு இந்த நகரில் முதல் பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பினை வழங்கியுள்ளான். இன்று முறைப்படி திறக்கப்பட்டுள்ளது. உலகக் கட்டடங்கள் அல்லது உலக நோக்கங்களை அடைவதற்காகக் கட்டப்படுகின்ற கட்டிடங்களின் திறப்பு விழாக்களில் உலக சம்பிரதாயத்திற்கேற்ப குறிப்பாக இந்த நாடுகளில் பொதுவாக உலகில், உலக மற்றும் வெளிப்படையான மகிழ்ச்சிகள் காணப்படுகின்றன. மேலும் இதிலிருந்து நாம் உலகப் பயனடைவோம் என்று அறிவிக்கவும் செய்கின்றனர். அவர்கள் பயன்பெறவும் செய்வர்.

ஆனால் மஸ்ஜித் திறக்கும்போது நாம் பள்ளிவாயில் கட்டும்போது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்கிறோம். அல்லாஹ்வின் இந்த வீட்டைக் கட்டுவதன் மூலம் நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டியது முழுக்க முழுக்க அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதாகவே இருக்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு செய்ய வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளவற்றை செய்வது அவசியமாகும். அதில் முதலாவதான நோக்கம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையைச் செலுத்துவதாகும். மேலும், அல்லாஹ் நமக்கு கூறியிருப்பதைப் போன்று அதனை நிறைவேற்ற வேண்டும்.

நான் ஓதிய வசனத்தில் அதன் மொழியாக்கத்தையும் படித்தேன். அதில் அல்லாஹ் நமக்கு கூறியிருப்பதெல்லாம் பள்ளிவாயில் கட்டுபவரின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதாகும். அல்லது பள்ளிவாயில் கட்டுவதற்கான உரிமையை நிறைவேற்றுபவர்கள் யார்?

அதனை நிரப்பும் கவலை உள்ளவர்களே அவர்களாவர். அதனை நல்ல நிலையில் வைக்கும் கவலை உடையவர்களாக அவர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது ஈமான் கொள்ளக் கூடியவர்கள் ஆவர். நாங்கள் அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்கிறோம் என்றும் எல்லாரும் கூறுகிறார்கள். ஆனால் அல்லாஹ் கூறுகிறான்: அதன் செயல் வெளிப்பாடும் அவசியமாகும். தொழுகையை நிலைநாட்டுவதன் செயல் முன்மாதிரி வெளிப்படுத்தப்படும்போதுதான் அது வெளிப்படும். தொழுகையை நிலைநாட்டுதல் என்றால் என்ன? அதன் செயல் வெளிப்பாடு எவ்வாறிருக்கும்?

அதன் செயல் வெளிப்பாட்டில் முதலாவது தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுவதாகும். இரண்டாவது, தொழுகையில் அல்லாஹ்வின் பக்கம் குனிந்து கவனத்தை நிலைநாட்ட வேண்டும். இவைதான் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் கூற்றுக்கள் மற்றும் விளக்கங்களிலிருந்து தெரிய வருகிறது.

எனவே, தொழுகையை உண்மையான முறையில் நிலைநாட்டக் கூடியவர்கள் யார் என்றால் அவர்கள் ஜமாஅத்தாக தொழும் வழக்கமுடையவர்களும் முழுக்க முழுக்க தமது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் வைத்து தொழக் கூடியவர்களுமாவர். துஆ, பாவமன்னிப்புக் கோருதல் மற்றும் கவனத்துடன் தொழக் கூடியவர்களாவர். கவனம் இங்குமங்கும் சிதறினால் மீண்டும் தமது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் கொண்டு வருபவர்களாவர். நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய இயலும்.

அதாவது எந்த அளவுக்கு நாம் தொழுகையை நிலைநாட்டுதலின் இந்த தரத்தை அடைய முயற்சி செய்பவர்களாவோம் என்று ஆய்வு செய்ய இயலும். இந்த பௌதீக உலகில் பெரும்பான்மை முதலில் அவர்கள்

ஜமாஅத்தான தொழுகைகளிலும், சுன்னத்துகளிலும் எந்த அளவுக்கு தொழுகைக்குரிய உரிமை வழங்கப்பட வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் இருப்பதில்லை. அப்படிப்பட்ட நிலை இருக்குமென்றால், நாமே நமது நிலைமைகளைக் கவனிக்க இயலும். அதாவது உண்மையிலேயே அல்லாஹ் பள்ளிவாயில் கட்டக்கூடியவர்கள் மற்றும் அதன் உரிமையை நிறைவேற்றக் கூடியவர்கள் என்று யாரைப் பற்றி கூறியுள்ளானோ அவர்களைச் சார்ந்தவர்களாக நாம் இருக்கிறோமா? என்று பார்க்க இயலும்.

பிறகு அல்லாஹ் கூறுகிறான்: ஸக்காத் கொடுப்பவர்கள் மார்க்கத்திற்காகவும் பொருள் தியாகம் செய்வார்கள். மேலும் அல்லாஹ்வின் படைப்பினங்களின் நலனிற்காகவும் அவர்களின் உரிமைகளை வழங்குவதற்காகவும் பொருள் தியாகம் செய்பவர்கள்.

பிறகு அவன் கூறுகிறான்: அவர்களுக்கு அல்லாஹ்வின் அச்சத்தைத் தவிர வேறு எந்த அச்சமும் இருப்பதில்லை. நமது ஏதேனும் செயலின் காரணமாக அல்லாஹ் கோபமடைந்து விடக்கூடாதே என்ற கவலையில் அவர்கள் இருப்பர். அல்லாஹ்வின் அன்பிலிருந்து நாம் விலக்கப்பட்டு விடக்கூடாதே என்ற கவலையில் இருப்பர். மேலும், தமது செயல்களை அல்லாஹ் ஓர் உண்மையான முஸ்லிமுக்கு வழங்கிய வழிகாட்டல் மற்றும் கட்டளைக்கிணங்க வைக்க முயல்பவர்களாவர். மேலும், திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறியவற்றிற்கு ஏற்ப முயற்சி செய்யவர்களாவர். எனவே, முஃமின் முஸ்லிமுக்கு இந்த பொறுப்பு சாதாரண பொறுப்பல்ல.

பிறகு இந்த பள்ளிவாயில் கட்டப்பட்ட பின் இங்கு வருபவர்கள் அல்லது இந்த பள்ளிவாயிலோடு தம்மை இணைத்துக் கொள்பவர்களின் பொறுப்புகள் முன்பை விட மிகவும் அதிகமாகி விட்டன. நீங்கள் உங்களுடைய இறைவணக்கங்களின் உரிமையையும் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழி பெற்ற மக்களில் அடங்குவோம். அப்போதுதான் எவர்கள் மீது அல்லாஹ்வின் அன்புப் பார்வை உள்ளதோ அவர்களில் இணைவோம்.

இந்த வசனத்திற்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் முஷ்ரிக் – இணைவைப்பவர்களுக்கு பள்ளிவாயில் கட்டும் எந்த உரிமையும் இல்லை அல்லது அதை நிரப்பும் உரிமையும் இல்லை என்று கூறியுள்ளான். அவர்களின் உள்ளங்கள் அல்லாஹ் அல்லாதவர்களால் நிரம்பியுள்ளன. எவருடைய உள்ளம் அல்லாஹ் அல்லாதவர்களால் நிரம்பி இருக்குமோ அவர் அல்லாஹ்விற்குரிய உரிமையை நிறைவேற்ற முடியாது. அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமையையும் நிறைவேற்ற இயலாது. ஷிர்க் – இணை வைப்பும் பலவகைப்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

ஷிர்க் பலவகைப்படும். முதலாவது பெரிய ஷிர்க். அதாவது ஏதேனும் மனிதனையோ அல்லது கல்லையோ அல்லது வேறு உயிரற்ற பொருள்களையோ அல்லது ஆற்றலையோ அல்லது கற்பனை தேவி தேவதைகளையோ இறைவனாக்கி வணங்குதல். இந்த ஷிர்க் இப்போது உலகில் இருந்தாலும் (அதாவது வெளிப்படையாக உலகில் உள்ளது.) ஆனால் இந்தக் காலம் ஒளி மற்றும் கல்வியின் எப்படிப்பட்ட காலம் என்றால் அறிவு இது போன்ற ஷிர்க் – இணைவைத்தலை வெறுப்புடன் காண்கிறது. இது ஷிர்க் ஆக இருந்தும் கூட கல்வி மனிதனை எந்த அளவுக்கு மாற்றி விட்டது என்றால் இந்த கல் மற்றும் மூர்த்திகளும் சிலைகளும் எந்தப் பயனும் அளிக்காது என்பதை அறிவு ஏற்பதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஆனால் இன்னொரு வகை உள்ளது. மறைவாக விஷத்தைப் போன்று தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அது இக்காலத்தில் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அது என்னவென்றால், இறைவன் மீது நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் போய் விட்டது. அதை அன்னார் விளக்கியுள்ளார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 79 & 80 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

அதாவது, காரணிகள் மற்றும் பிற பொருள்களின் மீது இறைவனை விட அதிக நம்பிக்கை உள்ளது. தமது வேலைகள், தொழில் மற்றும் பிற உலகப் பணிகளில் அதிக கவனம் உள்ளது. இதன் காரணமாகத்தான் தொழுகைகளின் பக்கம் கவனம் இல்லை. பள்ளிவாயில்களை நிரப்புவதன் பக்கம் கவனம் இல்லை.

எனவே நாம் துஆ செய்ய வேண்டும். இறைவா! எங்களை முழுமையான நம்பிக்கையாளராக்குவாயாக என்று பணிவாக துஆ செய்ய வேண்டும். ஏனென்றால் நம்பிக்கையாளராவதும் கூட அல்லாஹ்வின் அருளைச் சார்ந்தே உள்ளது. எனவே அவனிடம் கேட்டால்தான் அந்த அந்தஸ்து கிடைக்க இயலும். நாம் ஃபிலடெல்ஃபியாவில் (Philadelphia) ஓர் அழகிய பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம் என்று மட்டும் மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது.

மாறாக, நாம் இதற்கான உரிமையைச் செலுத்தியவாறு இறைவனிடம் நாம் செல்லும் போது இவர்கள்தான் இறைவனுக்காக பள்ளிவாயிலைக் கட்டினர். பிறகு அதற்குரிய உரிமைகளைச் செலுத்தவும் முயற்சி செய்தனர் என்ற ஓசையைக் கேட்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மேலும் நேர்வழி பெற்றவர்களுடனும், அல்லாஹ் திருப்தி அடைந்தவர்களுடனும் இணையக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

எனவே இந்த சிந்தனையை நாம் நம்மில் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இந்த சிந்தனை இருக்கும் என்றால் இதற்கு முயற்சி செய்வோம் என்றால் பிறகு இந்த பள்ளிவாயிலின் அருள்களை நாம் இவ்வுலகிலும் உணர்வோம். நமது குழந்தைகளும் தலைமுறைகளும் மார்க்கத்தோடு இணைந்திருக்கும். மேலும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியையும் இந்த பகுதி மற்றும் இந்த நகரில் பரப்புபவர்களாக இருப்போம். ஏகத்துவத்தை உலகில் நிலைநாட்டுபவர்களாக இருப்போம். மேலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை உலகி பறக்க விடக்கூடியவர்களாக இருப்போம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பள்ளிவாயிலைக் கட்டுவதன் ஒரு நோக்கமாக இதையும் கூறியுள்ளார்கள். அதாவது எந்தப் பகுதியில் இஸ்லாத்தின் உண்மையான போதனையை, உண்மையான தூதை பரப்ப விரும்புகின்றீர்களோ அங்கு பள்ளிவாயிலைக் கட்டுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இப்போது நமது ஜமாஅத்திற்கு பள்ளிவாயில்களின் அதிகமான தேவை உள்ளது. இது இறைவனின் இஸ்லாம் ஆகும். எந்த கிராமத்தில் மற்றும் நகரத்தில் நமது ஜமாஅத்தின் பள்ளிவாயில் கட்டப்பட்டு விட்டதோ ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் இடப்பட்டு விட்டது எனக் கருதிக் கொள்ளுங்கள். எந்தக் கிராமத்தில் நகரத்தில் முஸ்லிம்கள் குறைவாக உள்ளனரோ அல்லது முஸ்லிம்களே இல்லையோ அங்கு இஸ்லாத்தை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்றால், ஒரு பள்ளிவாயிலைக் கட்டி விட வேண்டும். பிறகு இறைவனே முஸ்லிம்களை ஈர்த்துக் கொண்டு வருவான்; ஆனால் நிபந்தனை என்னவென்றால், வெறும் பள்ளிவாயில் கட்டி விடுவதால் மட்டும் போதாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நிபந்தனை என்னவென்றால்... பள்ளிவாயில் கட்டுவதில் நிய்யத் கலப்பற்றதாக இருக்க வேண்டும். வெளிக்காட்டுவதற்காக இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக செய்யப்பட வேண்டும். அதாவது பள்ளிவாயில் கட்டுவதற்கான பணி முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக கட்டப்பட வேண்டும். சுய நோக்கங்களும் அல்லது ஏதேனும் தீமை ஒருபோதும் இருக்கக் கூடாது. அப்போது இறைவன் அருள் புரிவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 119 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

இந்த விஷயத்தை நாம் எப்போதும் நம் முன் வைக்க வேண்டும். பள்ளிவாயிலை நாம் கட்டினால், பள்ளிவாயிலுக்காக நாம் பொருள் தியாகங்களைச் செய்தால் அதில் எந்த வெளிக்காட்டலும் இருக்கக் கூடாது. மாறாக பள்ளிவாயில் தயாரானால் நாமும் இறை வணக்கத்திற்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக இருப்போம். நமது அடுத்த தலைமுறையும் பாதுகாப்பாக இருக்கும். மார்க்கத்துடன் இணைந்திருக்கும் என்ற நிய்யத் இருக்க வேண்டும்.

எனவே இந்தப் பள்ளிவாயிலைக் கட்டி அதை நிரப்புவதுடன் இன்னொரு பெரிய பொறுப்பும் இங்கு உள்ளவர்களின் மீது இருக்கின்றது. அது என்னவென்றால் இந்தப் பள்ளிவாயிலை இஸ்லாத்தின் தப்லீகிற்கான காரணியாக ஆக்க வேண்டும். இங்கு இந்த நகரில் முஸ்லிம்களின் 47 தொழுகை சென்டர்கள் உள்ளன.

ஆனால் முறையாக பள்ளிவாயில் என்ற வகையில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாயில் இதுவாகும். எனவே, பள்ளிவாயில் என்ற அடிப்படையில் இந்த கட்டடம் இந்த நகரில் கட்டுப்பட்டுள்ளபோது அது முஸ்லிம்களின் பள்ளிவாயிலின் உண்மையான தோற்றம் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகக் கட்டப்படவில்லை. மாறாக, இந்த பள்ளிவாயிலிருந்து இஸ்லாத்தின் அழகிய மற்றும் அமைதி நிறைந்த போதனை உலகின் முன் வர வேண்டும். நாம்தான் இந்த துஆ மற்றும் இறை வணக்கங்களோடு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை உலகில் பரப்புகின்றோம்.

இங்கு இப்போது முன்பை விட அதிகமாக தமது செயல் முன்மாதிரிகளின் மூலமாக இந்த பகுதியில் இஸ்லாமிய போதனையின் செயல் நிலைமையை வெளிப்படுத்தி நாம் அஹ்மதி முஸ்லிம்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். ஆனால் நமது அஹ்மதி மக்களின் ஒன்றிரண்டு வீடுகளைத் தவிர பொதுவாக பள்ளிவாயிலிலிருந்து சற்று தொலைவில் இருப்பதாக என்னிடம் கூறப்பட்டது.

அமீர் சாஹிப் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். இந்தப் பள்ளிவாயிலின் பரப்பளவு போதுமான அளவு பெரியதாகும். பெரிய நிலமாகும். இங்கு கட்டடங்கள் கட்டுவதற்கான அனுமதி கிடைக்கும் என்றும், இங்கு அடுக்கு மாடிக் கட்டடங்களோ அல்லது வீடுகளோ கட்டப்பட்டால் அஹ்மதிகள் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டால் பள்ளிவாயிலுக்கு அருகில் மக்கள் வசிக்கலாம் என்று கூறினார்கள்.

எனது பார்வையில் இது நல்லதோர் ஆலோசனையாகும். இது பற்றி சிந்திக்கப்பட வேண்டும். இந்த ஆலோசனை நடைமுறைப்படுத்தப்படத் தகுதியானதாக இருக்கும் என்றால் பிறகு கண்டிப்பாக முயற்சி செய்ய வேண்டும். இங்கு அஹ்மதிகள் வந்து குடியேற முயற்சி செய்ய வேண்டும். அஹ்மதிகள் பள்ளிவாயிலை நிரப்ப வேண்டும், இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் இங்கு குடியேறினால் பிறகு அல்லாஹ் இந்த நிய்யத்திலும் அருள் செய்வான் – இன்ஷா அல்லாஹ். இந்த விஷயம் அஹ்மதி மக்கள் தொகை அதிகரிப்பதற்கும் காரணமாக அமையும்.

நமது வரலாறு நமக்கு கூறுவது என்னவென்றால், 1920 –ல் ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் சாஹிப் முபல்லிக் ஆக அமெரிக்கா வந்தபோது இங்கு ஃபிலடெல்ஃபியாவின் (Philadelphia) துறைமுகத்தில் இறங்கினார்கள். ஆனால் அன்னார் நாட்டில் நுழைய அனுமதி வழங்கப்படவில்லை. அப்போது அனுமதி கிடைக்கவில்லை. அத்துடன் அவர்கள் ஒரு வீட்டில் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். அங்கு வேறு சில கைதிகளும் இருந்தனர். அன்னாரின் தப்லீகின் மூலம் இரண்டு மாதங்களில் 15 கைதிகள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 250)

தப்லீகோடு அவர்களின் செயல் முன்மாதிரியும் இருந்தது. அவர்களின் தக்வாவும் இருந்தது. அவர்களின் துஆக்களும் இருந்தன. எனவே இதுவும் தப்லீகிற்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். பிறகு அன்னார் இங்கு தங்கி இருந்த காலத்தில் 5000, 6000 பேர் அஹ்மதிகள் ஆனார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

பைஅத்துகளின் எண்ணிக்கை இப்படி இருக்கும் என்றால் சில பத்து ஆண்டுகளில் இலட்சங்கள் வரை இந்த எண்ணிக்கை செல்ல இயலும். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 477)

எவ்வாறிருப்பினும், அந்த இலக்கை அடைய முடியவில்லை. என்ன தடைகள் இருந்தனவோ அல்லது நிலைமைகள் இருந்தனவோ அல்லது நமது பலவீனமோ எதுவாக இருந்தாலும் சரியே. ஆனால் இப்போது சந்தர்ப்பம் உள்ளது. ஓர் உறுதியுடன் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலேயே இங்கு தூதுச் செய்தி எட்டியிருந்தது. அதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலான பராஹீனே அஹ்மதிய்யாவில் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அதேபோல் மேலும் பல ஆங்கிலேயர்கள், இந்த இயக்கத்தைப் பாராட்டுகின்றனர். மேலும் இதைப் பற்றிய தமது ஒத்த கருத்தை வெளிப்படுத்துகின்றனர். அதாவது நாங்களும் இந்த போதனையை ஏற்கிறோம் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

டாக்டர் A. ஜார்ஜ் பீக்கர், 404, ஸங்கஹானா அவென்யூ, ஃபிலடெல்ஃபியா, அமெரிக்கா ரிவியூ ஆஃப் ரிலீஜியன் பத்திரிகையில் எனது பெயரையும் கருத்தையும் படித்து விட்டு தமது கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: எனக்கு உங்களுடைய இமாம் சாஹிபின் கருத்துடன் முழுமையான உடன்பாடு உள்ளது. அன்னார் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் எவ்வாறு இஸ்லாத்தை எடுத்து வைத்தார்களோ அதே வடிவில் எடுத்து வைத்துள்ளார்கள்.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 5, ரூஹானி கஸாயீன் தொகுதி 21 பக்கம் 106)

பிறகு ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் சாஹிப் அவர்கள் ஓர் அறிக்கையில் எழுதுகிறார்கள்:

இந்த எளியவனுக்கு இந்த சில நாட்களில் அதாவது அமெரிக்காவிற்கு வந்து கழிந்த இந்நாட்களில் பெரும் கஷ்டங்கள் மற்றும் தடைகள் இருந்தும் கூட அதாவது வெறுப்புடைய கிறித்தவர்களால் கஷ்டங்கள் தரப்பட்டும் பல வெற்றிகள் கிடைத்துள்ளன. அல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.

பிறகு எழுதுகிறார்கள்: இப்போது 29 ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த எளியவனின் தப்லீக் மூலம் இஸ்லாத்தில் நுழைந்து விட்டனர். அவர்களின் பெயர் அவர்களின் புதிய இஸ்லாமிய பெயருடன் அனுப்பப்படுகின்றன. பிறகு விபரங்களை எழுதினார்கள்.

1. ஜார்ஜ் பிக்கர் மற்றும் 2. அஹ்மது ஆண்டர்சன். நீண்ட காலமாக இந்த எளியவனுடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தனர். முஸ்லிம்களாகி நீண்ட காலமாகி விட்டது. கலப்பற்ற முஸ்லிம்களாவர். இந்த பட்டியலில் இவர்களின் பெயர்கள் எல்லாவற்றிற்கும் முதலில் வைக்கப்பட வேண்டும் என நான் அவசியம் கருதுகிறேன்.

(அல்ஃபஸல் 22 ஜூலை 1920 தொகுதி 8 நம்பர் 4 பக்கம் 1)

நான் கூறியதுபோன்று பிறகு மற்றவர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது ஃபிலடெல்ஃபியாவில் டாக்டர் பிக்கரின் கபரும் கூட கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. 1918 –ல் அவர்கள் வஃபாத் ஆனார்கள். இங்கேயே அடக்கமும் செய்யப்பட்டுள்ளார்கள். இன்றிலிருந்து ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்பே இங்கு அஹ்மதிய்யத் வந்து விட்டது.

எவ்வாறிருப்பினும் இப்போது அல்லாஹ் நமக்கு இந்நகரில் ஓர் அழகிய பள்ளிவாயில் கட்டுவதற்கான நல்வாய்ப்பினை வழங்கியுள்ளான். இதன் மூலம் இனி ஒரு புது உறுதியுடன் இங்குள்ள ஜமாஅத்தும் முபல்லிக்கும் எப்படிப்பட்ட தப்லீக் திட்டங்களை வகுக்க வேண்டும் என்றால் அதன் மூலம் இஸ்லாத்தின் அழகிய போதனை எல்லா பக்கமும் பரவ வேண்டும். இந்த பகுதி அமைதி மற்றும் அழகின் அடிப்படையில் எப்படிப்பட்ட பகுதியாக மாற வேண்டும் என்றால் மக்கள் முயற்சி செய்து இந்த பகுதியில் வந்து குடியேற விரும்ப வேண்டும்.

மக்கள் தொகையின் அடிப்படையில் இந்த நகரம் அமெரிக்காவின் ஆறாவது பெரிய நகரமாகும். இந்த நகரத்திலும் இதன் அக்கம் பக்கத்து பகுதிகளிலும் இஸ்லாத்தின் சரியான தூதுச் செய்தியை எட்ட வைத்தால் பிறகு இவர்களிலிருந்தே சரியான இறைவனை வணங்குபவர்களும் பள்ளிவாயிலை நிரப்பக் கூடியவர்களும் வருவார்கள். மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சக்கூடியவர்களும், நேர்வழி பெற்றவர்களாவும் இருப்பர்.

எனவே நாம் கட்டக்கூடிய ஒவ்வொரு பள்ளிவாயிலும் நமக்கு ஒரு பெரும் சவாலைக் கொண்டு வருகிறது. நாம் நமது நிலைகளையும் சரி செய்ய வேண்டும். அல்லாஹ்வோடுள்ள தொடர்பிலும், செயல் முன்மாதிரியிலும் நமது நிலைமைகளைச் சிறந்ததாக ஆக்க வேண்டும். தப்லீகிற்கான களத்தையும் உருவாக்க வேண்டும்.

நாம் பள்ளிவாயிலைக் கட்டி விட்டோம் என்று மட்டும் மகிழ்ச்சி அடைந்து அமர்ந்து விடக் கூடாது. நாம் இக்காலத்தில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக வந்துள்ள நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரை ஏற்றுக் கொண்டுள்ளோம். இஸ்லாத்திற்கு அன்னார் புத்துயிர் வழங்க வேண்டியிருந்தது. மேலும் இஸ்லாம் தொடர்பாக ஏற்பட்ட அனைத்து தவறான எண்ணங்களையும் உலகத்தின் சிந்தனையிலிருந்து அகற்ற வேண்டியதிருந்தது. அது முஸ்லிம் அல்லாதவர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் சரி அல்லது பெயர் தாங்கி ஆலிம்களின் தவறான விளக்கங்களால் உருவாகி இருந்தாலும் சரியே.

இப்போது இந்தப் பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட நமது பணியாகும். இந்த அடிப்படையில் உங்களது அனைத்து முயற்சிகளையும், திறமைகளையும் பயன்படுத்துங்கள். உங்கள் நிலைமைகளையும் இறை வணக்கங்களையும் அல்லாஹ்வின் பார்வையில் ஏற்றுக் கொள்ளத்தக்க தரத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். அது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியுள்ளார்கள்.

இந்த பள்ளிவாயில் கட்டியதில் இப்போது வரை 8.1 மில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளது என என்னிடம் கூறப்பட்டது. மூன்றில் ஒரு பங்கு ஜமாஅத் வழங்கியுள்ளது. மீதி விபரம் பிறகு எடுத்துரைப்பேன். மேலும் சிறிது தேசிய தலைமையகம் வழங்கியுள்ளது. ஆனால் இந்த 8.1 மில்லியன் செலவழித்ததன் பயன் அதன் நோக்கத்தை பூர்த்தி செய்யும்போது தான் கிடைக்கும். தூரத்தில் இருந்தாலும் கூட அதாவது யாரெல்லாம் இந்த நகரில் வசிக்கின்றார்களோ அவர்களின் வீடுகள் பள்ளிவாயிலை விட்டு தொலைவில் இருந்தாலும் கூட இந்த பள்ளிவாயிலை நிரப்ப ஐவேளையும் முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

பள்ளிவாயிலின் உண்மையான அழகு கட்டடத்தில் இல்லை. மாறாக, கலப்பற்ற முறையில் தொழும் தொழுகையாளிகளில்தான் உள்ளது. அவ்வாறில்லை என்றால் இந்தப் பள்ளிகள் அனைத்தும் காலியாக உள்ளன. அக்காலத்தில் காலியாகக் கிடந்தன.

இன்றைய நாட்களில் நிரம்பி இருக்கின்றன என்றால் தவறான பெயர் தாங்கி ஆலிம்களின் தவறான முழக்கங்கள் அவற்றை அமைதிக்கு பதிலாக குழப்பத்திற்குக் காரணமாக்கியுள்ளன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாயில் சிறியதாக இருந்தது. பேரீச்ச மரக் கிளைகளால் அதன் மேற்கூரை அமைக்கப்பட்டிருந்தது. மழையின்போது மேற்கூரையிலிருந்து தண்ணீர் ஒழுகியது. ஆனால் அங்கு எப்படிப்பட்ட பணிகள் நிகழ்ந்தன!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

பள்ளிவாயிலின் பொலிவு தொழுகையாளிகளைச் சார்ந்துள்ளது. பிறகு கூறினார்கள்: இறையச்சத்திற்காக பள்ளிவாயில்கள் கட்டப்பட வேண்டும் என்பது கட்டளையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 170 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே கலப்பற்றத் தன்மையுடன் தொழுவதும் இறையச்சத்துடன் நடந்தவாறு இப்பள்ளியை நிரப்பினால் பிறகு இறைவணக்கங்களும் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் முஸ்லிம் அல்லாதவர்களிடம் இஸ்லாத்தின் தப்லீக் சரியான முறையில் நடக்க முடியும். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: எவர் நமது பள்ளிவாயிலில் நன்மையான விஷயங்களைக் கற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நுழைவாரோ அவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாது செய்பவரைப் போன்றவராவார்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 322, முஸ்னது அபீ ஹுரைரா ஹதீஸ் எண் 8587 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே இதுதான் உண்மையான முஸ்லிமின் நோக்கமாகும். இன்றைய நாட்களில் இஸ்லாத்தை அவப்பெயருக்கு உள்ளாக்குகின்றனர். அதாவது இஸ்லாம் ஜிஹாதின் போதனையை வழங்குகிறது என்கின்றனர். முஸ்லிம்களின் செயலும் கூட அவப்பெயருக்கு உள்ளாகிறது. ஆனால் உண்மையான நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால், நன்மையைக் கற்க வேண்டும்; நன்மையின்படி செயல்பட வேண்டும்; நன்மையைப் பரப்ப வேண்டும். அவ்வாறு செய்வார் என்றால் அவர் ஜிஹாது செய்பவரைப் போன்றவராவார்.

இந்த ஜிஹாதை செய்வது இன்று அஹ்மதிகளாகிய நமது பணியாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் நன்மையில் நடப்பதற்கும் இறையச்சத்தில் முன்னேற்றம் அடைவதன் பக்கமும் கவனமூட்டுகின்றார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த உயிலைக் கவனத்துடன் கேளுங்கள். இந்த இயக்கத்தில் இணைந்து கொள்கை ரீதியில் என்னுடன் தொடர்பு கொள்ளக் கூடியவர் நன்மையிலும் நன்னடத்தையிலும் இறையச்சத்தின் உயர் தரம் வரை எட்ட வேண்டும். எந்த குழப்பம், தீமை, தீய நடத்தையும் அவர்களின் அருகில் கூட வரக் கூடாது. ஐவேளை தொழுகைகளைப் பேணக் கூடியவராக இருக்க வேண்டும். பொய் கூறக் கூடாது. எவருக்கும் நாவினால் துன்பம் தரக்கூடாது. எந்த கஷ்டத்தையும் வழங்கக் கூடாது. எந்த வகையான தீய நடத்தைக்கும் ஆளாகக் கூடாது. எந்த விதமான தீமை மற்றும் அநீதி, குழப்பம் போன்றவற்றின் எண்ணம் கூட உள்ளத்தில் எழக் கூடாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

சுருக்கமாக, எல்லா வகையான பாவங்கள் மற்றும் குற்றங்கள், தகாத செயல்கள், எந்த வகையான தீங்காக இருந்தாலும் சரி அவை அவரிடமிருந்து வெளிப்படக் கூடாது. அனைத்து மன உணர்ச்சிகள், தகாத செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். தூய உள்ளமுடைய, தீங்குகள் அற்ற, எளிய நடத்தை உடைய இறைவனின் நல்லடியார்களாக ஆகி விட வேண்டும். எந்த விஷத் தன்மையுடைய எண்ணங்களும் அவர்களின் இயல்பில் இருக்கக் கூடாது. அனைத்து மனித குலத்தின் மீதும் அனுதாபம் கொள்வது அவரது நடைமுறையாக இருக்க வேண்டும். இறைவனுக்கு அஞ்ச வேண்டும். தமது நாவு, கை மற்றும் உள்ளத்தின் சிந்தனைகளை எல்லா வகையான அசுத்தமான மற்றும் குழப்பத்தை அதிகரிக்கச் செய்யும் வழிமுறைகளிலிருந்தும் நேர்மையற்ற தன்மையிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

ஐவேளை தொழுகைகளை மிகவும் முறைப்படி தொழ வேண்டும். அநீதி, உரிமைகளைப் பறித்தல், தகாத ஒரு தலைப்பட்சமாக நடத்தல் போன்றவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். எவருக்கேனும் தவறாக ஒருதலைப்பட்சமாக நடத்தலும் தவறானதாகும். மக்களின் உரிமைகளைப் பறிப்பதும் தவறானதாகும். குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் தீய நட்பில் அமரக் கூடாது.

(மஜ்மூஆ இஷ்திஹார் தொகுதி 3 பக்கம் 46 & 47 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

குறிப்பாக இளைஞர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய காலத்து புதிய ஊடகங்களும் கூட தீய சகவாசங்களாகும். பல்வேறு வகையான Social Media –க்களிலும் வேறு சில இடங்களிலும் தவறான பேச்சுக்கள் பேசப்படுகின்றன. அவற்றிலிருந்து விலகி இருக்க முயற்சி செய்ய வேண்டும். இங்கு பாகிஸ்தானிலிருந்து பெரும்பான்மை மக்கள் Asylum வாங்கி குடியேறி உள்ளனர். அல்லது அகதிகளாக (refugee) வந்துள்ளனர். அவர்கள் இதன் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வோர் அஹ்மதியின் முன்பும் இவ்வுலகின் மகிழ்ச்சிகளும் ஆசைகளும் மட்டுமே இருக்கக் கூடாது. மாறாக மறுமை பற்றிய கவலை இருக்க வேண்டும். அங்கு கிடைக்கும் அருள்களும் பலன்களும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியவையாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

இறைவனும் மனிதனின் செயல்களுக்கான தினசரி பதிவேட்டை தயார் செய்கிறான். தினமும் அவனது செயல்கள் எழுதப்படுகின்றன. எனவே மனிதனும் தனக்கு ஓர் அன்றாட பதிவேட்டை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். இன்று நாள் முழுவதும் நான் என்ன நன்மைகள் செய்துள்ளேன்? என்ன தீமைகள் செய்துள்ளேன்? எந்த விஷயங்களில் செயல்பட்டுள்ளேன். எவற்றின்படி செயல்படவில்லை என்று தன்னைப் பற்றி பார்க்க முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அதைப் பற்றி சிந்திக்கவும். அதாவது பதிவேட்டை ஆயத்தம் செய்தல் மட்டும் போதாது. மாறாக சிந்திக்க வேண்டும். அப்போதுதான் மனிதன் நன்மையின் பக்கம் செல்ல முடியும். அல்லாஹ்வின் பார்வையில் நேர்வழி பெற்றவராக ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நன்மையில் எதுவரை முன்னோக்கி அடியெடுத்து வைத்துள்ளீர்கள் என்று பார்க்க வேண்டும். மனிதனின் இன்றும் நாளையும் ஒன்றுபோல் இருக்கக் கூடாது. நன்மையில் என்ன செய்தோம் என்பதில் எவரின்

இன்றும் நாளையும் கூட சமமாக இருக்குமோ அவர் இழப்பிற்குரியவராவார்.

அன்னார் கூறினார்கள்: சமமாக இருக்கும் என்றால் பலன் இல்லை. மாறாக இழப்புதான். மனிதன் இறைவனை ஏற்றுக் கொள்ளக் கூடியவனாகவும் அவன் மீது முழுமையான ஈமான் கொள்ளக் கூடியவனாகவும் இருந்தால் அவன் ஒருபோதும் வீணாக்கப்பட மாட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 137 & 138 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே இது சிந்திக்க வேண்டியதாகும். அல்லாஹ் நம் மீது அருள் செய்கிறான் என்றால் அதற்கு நன்றி செலுத்துவது நம் மீது கடமையாகும். எனவே தமது உலகத் தொழில்களின் காரணமாக இறைவனுக்குரிய உரிமையையும், தமது இறை வணக்கங்களையும் மறந்து விட்டீர்கள் எனில் அல்லது எந்த அளவு கவனம் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் இல்லையென்றால் அவர் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

நம்முடைய பைஅத் உடன்படிக்கை என்ன? நம்முடைய செயல் என்னவாக உள்ளது? என்று பார்க்க வேண்டும். இங்கு புதிதாக வந்துள்ளர்களும் நினைவில் கொள்ளுங்கள். உலகில் மூழ்குவது முன்னேற்றம் இல்லை; அழிவாகும். இதை எப்போதும் முன் நிறுத்த வேண்டும். அதாவது உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பள்ளிவாயில்களுக்குரிய உரிமைகளை செலுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இன்னொரு மேற்கோளையும் முன் வைக்கிறேன். அன்னார் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ளுங்கள். நமது ஜமாஅத் பொதுவாக உலகவாதிகள் வாழ்க்கையைக் கழிப்பது போன்று வாழ்வதற்கு அல்ல. நாம் ஜமாஅத்தில் இணைந்துள்ளோம் என்று வாயால் மட்டும் கூறி விட்டு செயல்களின் தேவை இல்லை எனக் கருதினால் துரதிஷ்டவசமாக முஸ்லிம்களின் நிலையைப் போன்று ஆகி விட்டால் அதாவது நீங்கள் முஸ்லிமா? என்று கேட்டால் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவார்கள். ஆனால் தொழுவதில்லை. அல்லாஹ்வின் அடையாளங்களை மதிப்பதில்லை. எனவே நீங்கள் நாவினால் மட்டும் உடன்படிக்கை செய்து கொள்வதை நான் விரும்பவில்லை. செயல் ஒன்றும் இல்லை என்றால் இது ஓர் இயலாத தன்மையாகும். அல்லாஹ் இதை விரும்புவதில்லை.

உலகின் இப்படிப்பட்ட நிலைமைதான் என்னை இறைவன் சீர்திருத்தத்திற்காக அனுப்ப வேண்டும் என்பதை எதிர்பார்த்தது. எனவே இப்போது எவரேனும் என்னுடன் தொடர்பு கொண்டும் கூட தமது நிலையை சீர்திருத்தவில்லை என்றால் செயலின் ஆற்றலுக்கு முன்னேற்றம் வழங்கவில்லை என்றால் நாவினால் கூறுவதை மட்டும் போதுமானதாகக் கருதுகிறார் என்றால் அவர் தனது செயலால் எனது வருகையின் தேவையில்லை என்பதற்கு அழுத்தம் கொடுத்தவரைப் போலாவார். செயல் ஆற்றலின் முன்னேற்றம் என்பது ஏற்கெனவே கூறப்பட்டது போன்று அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும். இறைவணக்கங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும். அவனின் அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்க வேண்டும். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் வந்தது பயனற்றது என்பதை உங்களுடைய செயலால் நிரூபிக்க விரும்பினால் பிறகு என்னோடு தொடர்பு கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன? என்னோடு தொடர்பு கொண்டுள்ளீர்கள் என்றால் எனது நோக்கத்தை நிறைவேற்றுங்கள். அது என்னவென்றால், இறைவனிடம் உங்களின் கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தைக் காட்டுங்கள்.

எவ்வாறு நபி (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனின்படி நடந்து காட்டினார்களோ சஹாபாக்கள் நடந்தார்களோ அதுபோன்று திருக்குர்ஆனின் போதனைகளின்படி நடங்கள். திருக்குர்ஆனின் விருப்பம் என்ன என்பதை அறியுங்கள். அதன்படி செயல்படுங்கள். நாவளவில் ஏற்றுக் கொண்டு விட்டு செயலில் எந்த ஒளியும் இல்லை என்றால் அது இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு போதுமானதல்ல. நினைவில் கொள்ளுங்கள். இறைவன் நிலைநாட்ட விரும்புகின்ற ஜமாஅத் செயல் இல்லாமல் உயிருடன் இருக்க முடியாது. இது எப்படிப்பட்ட மகத்தான ஜமாஅத் என்றால் இதற்கான ஆயத்தப்படுத்துதல் ஹஸ்ரத் ஆதமின் காலம் முதலே ஆரம்பிக்கப்பட்டது. இந்த அழைப்பைப் பற்றி தெரிவிக்காத எந்த நபியும் உலகில் வரவில்லை. எனவே இதற்கு மதிப்பளியுங்கள். அதற்கு மதிப்பளித்தல் என்பது உண்மையை உடைய கூட்டம் நீங்கள்தான் என்பதை செயல்படுத்திக் காட்டுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 370 & 371 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

எனவே இது ஒரு சாதாரண பணியல்ல. மிகவும் கவலையுடன் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். உலகமும் அல்லது உலகச் செல்வமும் நாம் மற்றும் நமது தலைமுறையின் வாழ்விற்கான உத்திரவாதம் இல்லை. மாறாக, ஈருலகிலும் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கு அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்துவதுதான் எஞ்சி இருத்தலுக்கான உத்திரவாதமாகும். அவனுடைய கட்டளைகளின்படி நடப்பதுதான் எஞ்சி இருத்தலுக்கான உத்திரவாதமாகும். அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் இதற்கேற்ப வாழ்வைக் கழிப்பதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

பொதுவாக பள்ளிவாயில் திறப்பு விழாவின்போது பள்ளிவாயில் பற்றிய சில விபரங்களை நான் கூறுவதுண்டு. அதையும் இப்போது கூறுகிறேன். இந்த பள்ளிவாயிலின் நிலம் 2007 ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. பிறகு 2013 –ல் ஏறக்குறைய 6 ஆண்டுகளுக்குப் பிறகு பணிகள் ஆரம்பமானது. பிறகு இடையிடையே சில தடைகள் வந்தன. அது ஆகுமான தடையோ அல்லது ஆகுமற்ற தடையோ எவ்வாறிருப்பினும் இவ்வாண்டு பள்ளிவாயில் முழுமை அடைந்துள்ளது.

நான் கூறியதுபோன்று 8.1 மில்லியன் டாலர் செலவாகியுள்ளது. அதில் உள்ளூர் ஜமாஅத் 2 மில்லியன் 4 இலட்சத்து 35 ஆயிரத்திற்கும் சற்று அதிகமான டாலர்களை ஃபிலடெல்ஃபியா (Philadelphia) ஜமாஅத் வழங்கியுள்ளது. 1 மில்லியன் 2 இலட்சத்தி 43 ஆயிரத்திற்கும் அதிகமான டாலர்களை அமெரிக்காவின் பிற ஜமாஅத்துகள் வழங்கியுள்ளன. 4 மில்லியன் 4 இலட்சத்தி 78 ஆயிரத்திற்கும் அதிகமான டாலர்களை தேசிய தலைமையகம் வழங்கியுள்ளது. ஏறக்குறைய பாதிக்கு மேல் தொகையை தேசிய தலைமைகள் கொடுத்துள்ளது.

ஆரம்பத்தில் 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. பிறகு மேலும் ஒரு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. பிறகு 2015 –ல் ஒரு முஸ்லிம் அல்லாதவர் அநேகமாக கிறித்தவர் முக்கால் ஏக்கர் நிலத்தை ஜமாஅத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். அவருக்கு என்ன உலக நோக்கம் இருந்தாலும் எவ்வாறிருப்பினும் அதனை பள்ளிவாயிலுக்கு நன்கொடையாக வழங்கினார். இப்போது இதன் மொத்த பரப்பளவு 4 ஏக்கர் ஆகும்.

நான் கூறியதுபோன்று இங்கு Housing Scheme அல்லது Flats போன்றவற்றை கட்டலாம். இந்த Covered ஏரியாவானது 21,400 சதுர அடியாகும். மூன்று மாடி கட்டடமாகும். தரைத் தளத்தில் சமையலறை உள்ளது. நடுத் தளத்தில் முபல்லிக் தங்குவதற்காக ஒரு பகுதி கட்டப்பட்டுள்ளது.

மேல் தளத்தில் அலுவலகங்களும் நூலகமும் அமைக்கப்பட்டுள்ளன. பள்ளிவாயில் பகுதியும் இரு தளங்களை உடையதாகும். ஆண் பெண்களுக்கான ஒரு பெரிய ஹால் உள்ளது. அது 5000 சதுர அடி உடையதாகும். அது இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 350 ஆண்களும் 350 பெண்களும் தொழக்கூடிய இடம் உள்ளது. கட்டடத்தின் இந்த பகுதியில் ஆண் பெண்களுக்கு தனித்தனியே Wash room கட்டப்பட்டுள்ளன. வேறு பிற தேவைகளும் முழுமை செய்யப்பட்டுள்ளன.

6000 சதுர அடி கொண்ட Multi Purpose Hall –ம் உள்ளது. அதில் 700 பேர் அமரலாம். விளையாட்டுகளும் நடக்கலாம். ஜமாஅத்தின் அலுவலகங்களும் அமைந்துள்ளன. 46 வாகனங்கள் நிறுத்தும் நிரந்தர பார்க்கிங்கும் கட்டப்பட்டுள்ளது. மொத்தம் 86 வாகனங்களையும் நிறுத்தலாம். இன்னும் அதிகமாகவும் வைக்கலாம்.

அல்லாஹ் பள்ளிவாயில் கட்டுவதன் நோக்கமாக் கூறியவைகளை எவைகளை நான் கூறினேனோ அதன்படி ஒவ்வோர் அஹ்மதியும் அந்த நோக்கத்தை பூர்த்தி செய்பவராக இருக்கட்டுமாக. இந்த பள்ளிவாயில் இந்தப் பகுதியில் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைப்பதில் ஒரு மைல் கல்லாக அமையட்டுமாக.

# ஜுமுஆ பேருரை

**தவறான எண்ணம் நீங்கி விட்டாலே நமது சமூகத்திலுள்ள பாதிக்கும் அதிகமான குழப்பங்கள், சண்டைகள், பகைமைகள் நீங்கி விடும். ஒற்றுமை உருவாகி விடும். ஒருமைப்பாடு உருவாகி விடும்**

**இறைவணக்கம் மற்றும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால் அதற்கான அடிப்படையான விஷயம், மனிதன் தீமையிலிருந்து விலக வேண்டும். மேலும் நன்மைகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே இறையச்சமாகும்**

**கொள்கை மட்டும் எந்த பயனும் தராது. உண்மையான விஷயம் செயல் ஆகும். அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதோ, அஹ்மதி ஆகுவதோ போதுமானது கிடையாது. தம்மைத்தாமே அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்வது அவசியமாகும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது சஹாபாக்கள் நட்சத்திரத்தைப் போன்றவர்கள் ஆவார்கள். எவருக்குப் பின்னால் நீங்கள் சென்றாலும் அவர் உங்களைச் சரியான வழியில் கொண்டு செல்வார்**

**நினைவில் கொள்ளுங்கள். எவரது நோக்கம் உலகமாக இருக்குமோ மேலும் அவர் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளார் என்றால் பிறகு அவர் அல்லாஹ்வின் பார்வையில் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர் கிடையாது. அல்லாஹ்வின் பார்வையில் உலகைத் துறந்தவரே இந்த ஜமாஅத்தில் இணைந்தவராவார்**

**அல்லாஹ்விற்காகவே ஆகுகின்ற நபரை அவன் ஒருபோதும் வீணாக்க மாட்டான். மாறாக, அவனே அவனது பாதுகாவலனாக ஆகி விடுகின்றான்**

**இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர் அல்லது அவரது குழந்தை ஒருபோதும் அழிவிற்குள்ளானதும் கிடையாது; அழிவிற்குள்ளாகவும் மாட்டார்கள்**

**மார்க்கத்திற்கு முன்னுரிமைக் கொடுக்கும் போதுதான் இந்த பைஅத் பயன் தரும். இதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள்**

**இந்த தண்டனைகள் சாதாரணமானது கிடையாது. இது பற்றி நூறு ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவிப்பு செய்யப்பட்டு விட்டது. இதிலிருந்து தப்பிப்பதற்குரிய ஒரே வழி மனிதன் இறைவன் பக்கம் வர வேண்டும்**

**நெருப்பாகும்; ஆனால் அற்புதங்களைக் காட்டக்கூடிய அந்த இறைவன் மீது அன்பு கொள்ளக்கூடிய ஒவ்வொருவரும் இந்த நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவார்**

**அல்லாஹ்வின் சில கட்டளைகளை ஏற்காதது அவனது அனைத்து விஷயங்களையும் கைவிட்டு விடுவதே ஆகும்**

**பைஅத்தின் உரிமைகளைச் செலுத்தியவாறு தம்மிடத்தில் தூய மாற்றத்தை உருவாக்கிக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஹோஸ்டனில் (அமெரிக்கா) பைத்துஸ் ஸமீஃ பள்ளிவாசலில் 26 அக்டோபர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ் நம்மீது செய்துள்ள மிகப்பெரும் அருள் என்னவென்றால், அவன் தனது அருளால் நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நற்பாக்கியத்தை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமது மஹ்தி என்று கூறிய மற்றும் நினைவு கூர்ந்த அந்த உண்மையான அடியாரை ஏற்றுக் கொள்வதற்கான பாக்கியத்தை வழங்கியுள்ளான்.

(சுனன் தாருல் குத்னி தொகுதி 1 பக்கம் 51 ஹதீஸ் எண் 1777, கிதாபுல் ஈதைன் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த அன்பு மற்றும் உயர் நெருக்கத்தின் படித்தரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். எங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பிரசுரங்களில் இஸ்லாத்தை மிகச்சிறந்த மார்க்கம் என்பதைப் பற்றி எடுத்துக்கூறி, இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களது ஆட்சேபனையை அவர்கள் பக்கமே திருப்பி, இன்று உண்மையான மற்றும் இறைதிருப்தியை பெற்றுத் தரக்கூடிய மற்றும் பாவத்திலிருந்து இரட்சிப்பை வழங்கக்கூடிய மார்க்கம் இருக்கின்றதென்றால் அது இஸ்லாமே ஆகும் என்று எடுத்துக் கூறியுள்ளார்களோ அங்கு தம்மைப் பின்பற்றுபவர்களின் தர்பிய்யத்திற்காகவும் எண்ணற்ற சொற்பொழிவுகள், எழுத்துக்கள் மற்றும் சபைகளில் எண்ணற்ற கூற்றுகளை எடுத்துக் கூறியுள்ளார்கள். அவை நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வோர் அடிக்கும் வழிகாட்டியாக இருக்கின்றன. மேலும் நேர்வழிக்கான காரணியாகவும் இருக்கின்றன.

அன்னார் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம், மிகுந்த வேதனையுடன் பைஅத்தின் உரிமையை செலுத்துமாறும், உண்மையான இறை அடியார் ஆவதன் பக்கமும் வழியாட்டியுள்ளார்கள். அந்த கூற்றுகளை நாம் எப்போதும் நம்முன் வைக்க வேண்டும். மேலும் அதுவே நமது ஆன்மீக தர்பிய்யத்திற்கு வழியாக இருக்கின்றது. இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் மார்க்க ஞானத்தைப் பெற முடியும்.

மேலும் இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் இறைதிருப்தியைப் பெறக்கூடிய வழியையும் காண முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் திருக்குர்ஆனின் ஞானத்தைப் பெற முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் அந்தஸ்தைப் பற்றி தெரிந்து கொள்ள முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் நமது கொள்கை அளவிலான நிலைமைகளைச் சீர்படுத்த முடியும். இந்த வழிமுறையின் மூலமாகவே நாம் நமது செயல் நிலைமைகளில் முன்னேற்றதை ஏற்படுத்த முடியும்.

இந்த கருவூலங்களை பெற்ற பின்பும் நாம் இதிலிருந்து பலனடையவில்லையென்றால் நிச்சயமாக நாம் துர்பாக்கியசாலி ஆவோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வார்த்தைகளில் இருக்கின்ற ஆற்றல், பரிசுத்தத்தன்மை மற்றும் தாக்கமானது வேறொருவரது கூற்றில் இருக்க முடியாது. எப்படி அவ்வாறு இருக்கவும் முடியும்?

ஏனென்றால் இந்த இமாமைத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் இஸ்லாத்தன் மறுமலர்ச்சிக்காகவும், அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுத் தருவதற்காகவும் இந்த காலத்தில் அனுப்பினான்.

ஆக, **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது பைஅத்தில் வந்து விட்டோம் என்று வாதம் செய்கின்ற நமது கடமை என்னவென்றால், அன்னாரது கூற்றுகளைப் படிக்க வேண்டும். மேலும் அதை செவியேற்க வேண்டும். மேலும் அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். நமது நிலைமைகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்ற அந்த தரத்திற்கு நாம் கொண்டு செல்ல வேண்டும்.** இப்போது நான் அன்னாரது சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அது நமது வாழ்க்கைக்கு வழியாட்டியாகும். அது ஒரு குறிக்கோளாகும். அதனை அன்னார் நம்முன் வைத்துள்ளார்கள். அதாவது ஓர் அஹ்மதியின் படித்தரம் எவ்வாறு இருக்க வேண்டும்? அவர் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும்? என்று அன்னார் நம்மிடம் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இன்றைய பௌதீக உலகில் இந்த கூற்றுகளின் முக்கியத்தும் மேலும் அதிகமாகி விடுகின்றது. **நம்மில் சிலரது முன்னுரிமையும் கூட உலகத்தின் பக்கம் அதிமாக ஆகிவிட்டது. மேலும் மார்க்கத்திற்கு அந்த அளவுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. கொள்கை அளவில் நாம் நம்மை அஹ்மதி முஸ்லிம்கள் என்று கூறுகின்றோம். ஆனால், நமது செயல் நடைமுறைகளில் நம்மிடல் பல பலவீனங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.** அன்னாரது இந்த கூற்றுகளின் ஒளியில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஆராய்ந்து பார்க்க முடியும். அதாவது நாம் எங்கு நிற்க வேண்டும்? ஆனால் நாம் எங்கு நிற்கின்றோம்? இறையச்சம் என்றால் என்ன? இறையச்சத்தின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? நன்மை என்றால் என்ன? நன்மையின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? நமது பொறுப்புகள் என்ன?

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: உண்மையான இறையச்சத்தை அடைவதற்காக இறைவன், يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ அதாவது நம்பிக்கை கொண்டவர்களே! இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறியுள்ளான்.

மேலும் இறைவன், اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيۡنَ اتَّقَوْا وَّالَّذِيۡنَ هُمۡ مُّحۡسِنُوۡنَ அதாவது இறையச்சத்தை மேற்கொள்பவர்களுடன் இறைவனது உதவி இருக்கும் (16:129) என்று கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: தக்வா என்றால் தீமையிலிருந்து விலகி இருப்பதற்குக் கூறப்படும். மேலும் مُّحۡسِنُوۡنَ என்பவர் தீமையிலிருந்து மட்டும் விலகி இருப்பவர் அல்ல. மாறாக, நன்மையையும் செய்பவர் ஆவார்.

மேலும் அன்னார் இதனையும் கூறினார்கள்: لِلَّذِيۡنَ اَحۡسَنُوا الۡحُسۡنٰى அதாவது அவர்கள் நன்மைகளை மிகச்சிறந்த முறையில் செய்கின்றனர் (10:27)என்று அல்லாஹ் கூறுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيۡنَ اتَّقَوْا وَّالَّذِيۡنَ هُمۡ مُّحۡسِنُوۡنَ (16:129) என்ற இந்த வஹீ எனக்கு மீண்டும் மீண்டும் வந்தது. எந்த அளவுக்கு வந்தது என்றால், அதை என்னால் எண்ண முடியாது. இறைவனே அறிவான். இரண்டாயிரம் முறை வந்திருக்கலாம். இதன் நோக்கம் என்னவென்றால், **ஜமாஅத் மக்களுக்கு இது பற்றிய அறிவு இருக்க வேண்டும். அதாவது அவர்கள் நாங்கள் ஜமாஅத்தில் இணைந்து விட்டோம் என்பதை மட்டும் போதுமானதாகக் கருதிவிடக் கூடாது. உண்மையான இறையச்சமும், நன்மையும் இருக்கும் போதுதான் அல்லாஹ்வின் உதவியும் கிடைக்கும்.**

அன்னார் கூறினார்கள்: இது பெருமை கொள்ளக்கூடிய விஷயமல்ல. அதாவது இந்த விஷயங்களினால் மட்டும் மகிழ்ச்சி அடைந்து விடக்கூடாது. உதாரணமாக, அவன் விபச்சாரம் செய்வதில்லை. அல்லது அவன் எவரையும் கொலை செய்யவில்லை. திருடவில்லை போன்றவை.

அன்னார் கூறுகின்றார்கள்: தீமையிலிருந்து விலகி இருக்கின்ற இவ்விஷயங்கள் பெருமை கொள்ளத்தக்க மேன்மைக்குரிய விஷயமா? நாம் தீமையிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று கூறுவது மட்டும் ஒன்றும் பெரிய விஷயமல்ல. இதற்கு எவ்வித முக்கியத்துவமும் கிடையாது.

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையில் இவ்வாறு தீமை செய்யாதவர் நன்கு அறிவார். அதாவது நான் திருடினால் கைது செய்யப்படுவேன். சிறைச்சாலைக்குச் செல்வேன். தண்டனை கிடைக்கும் என்பதை அவர் நன்கு அறிவார்.

அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் பார்வையில் இதற்குரிய பெயர் இஸ்லாம் கிடையாது. அதாவது தீமையான செயல்களிலிருந்து தவிர்ந்திருப்பது. இது மட்டும் இஸ்லாம் கிடையாது. மாறாக, எப்போது வரை தீமையை விட்டு விட்டு நன்மையை அவர் செய்யவில்லையோ அவரால் இந்த ஆன்மீக உலகில் உயிரோடு இருக்க முடியாது. நன்மை என்பது ஒரு உணவைப் போன்றதாகும்.

எவ்வாறு ஒருவர் உணவின்றி உயிருடன் இருக்க முடியாதோ அவ்வாறே எப்போது வரை ஒருவர் நன்மையை மேற்கொள்ளவில்லையோ அப்போது வரை அவர் ஒன்று மற்றவராவார். தீமையை விட்டு விட்டு நன்மையை மேற்கொள்வதனால்தான் ஆன்மீக வாழ்வு கிடைக்கின்றது. **சில தீமைகள் எவ்வாறு மனிதனின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை மனிதன் உணரக்கூட முடியாதவனாக இருக்கின்றான். ஆனால் ஒருநேரத்தில் இதன் காரணமாகவே அவன் இறைவனது பிடியின் கீழ் வந்து விடுகின்றான்.**

இது தொடர்பாக எடுத்துக் கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

சில தீமைகள் பெரியனவாகும். உதாரணமாக, பொய் பேசுவது, விபச்சாரம் செய்வது, ஏமாற்றுவது, பொய் சாட்சியம் கூறுவது, மக்களது உரிமைகளைப் பறிப்பது மற்றும் இணை வைப்பது போன்றவை ஆகும். ஆனால் **சில தீமைகள் எந்த அளவுக்கு நுட்பமானதாக இருக்கின்றனவென்றால் மனிதன் அந்த தீமைகள் செய்த போதிலும் அவன் அந்த தீமைகளைச் செய்வதை புரிந்து கொள்வதே இல்லை. இளைஞனாக இருந்து முதியவராக ஆன பிறகும் நான் பாவங்கள் செய்கிறேன் என்பதை அவர் புரிந்து கொள்வதே இல்லை. பாவங்கள் செய்தவாரே வயது கடந்து விடுகின்றது. அதை அவர் சின்னச்சின்ன பாவம் என்று கருதுகின்றார். அது அவருக்குத் தெரிவதே இல்லை.** உதாரணமாக, புறம் பேசக்கூடிய பழக்கம். சின்னச் சின்ன விஷயங்களுக்காகப் பகைமையை வெளிப்படுத்துவது, அவர் இவ்வாறு கூறி விட்டார்: இவர் இவ்வாறு கூறி விட்டார் என்று கூறுவது போன்றவை ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இத்தகைய மக்கள் இவற்றை மிகச்சிறிய பாவமாக கருதுகின்றனர். ஆனால் திருக்குர்ஆன் இதனைப் பெரிய பாவமாக எடுத்துரைக்கின்றது. குற்றஞ்சாட்டுவது, போட்டுக் கொடுப்பது போன்ற இந்த சின்னச்சின்ன விஷயங்கள் இறுதியில் ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் தவறாக எடுத்துக் கூறும் பழக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. எனவேதான் திருக்குர்ஆன் இதனை மிகப்பெரிய பாவமாக எடுத்துக் கூறியுள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான். اَيُحِبُّ اَحَدُكُمۡ اَنۡ يَّاۡكُلَ لَحۡمَ اَخِيۡهِ مَيۡتًا

**மனிதன் கூறக்கூடிய ஏதாவதொரு விஷயமானது தனது சகோதரனை ஏளனப்படுத்தக் கூடியதாக இருக்குமென்றால் அத்தகைய விஷயங்களினால் இறைவன் கோபமடைகின்றான். நீங்கள் மரணித்துப்போன உங்களது சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவீர்களா? (49:13) என்று இறைவன் கூறுகின்றான்.**

அன்னார் கூறுகின்றார்கள்: **மனிதன் தனது சகோதரனுக்குத் துன்பத்தை விளைவிக்கும் விஷயங்களைப் பேசுவதினாலும் இறைவன் கோபமடைகின்றான். இவ்வாறு பேசுவது ஒரு கூற்றாக மட்டும் இருப்பதில்லை. மாறாக, அது அவனுக்குத் துக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.** குற்றஞ்சாட்டுதல் உருவாகி விடுகின்றது. ஒருவர் மற்றொருவர் மீது தப்பெண்ணம் ஏற்பட ஆரம்பமாகின்றது. புறம்பேசுதல் ஆரம்பித்து விடுகின்றது. இறுதியில் மனிதன் எப்படிப்பட்ட நிலையை அடைந்து விடுகின்றான் என்றால், அந்த நிலையில் அவன் மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றே எண்ணுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: **இவ்வாறே கருமித்தனமும் இருக்கின்றது. கருமித்தனம், கோபம் ஆகிய இவை அனைத்தும் தீய வேலையாகும். கருமித்தனத்தை வெளிப்படுத்துவது, கோபப்படுவது ஆகிய இவை அனைத்தும் தீய பணிகளாகும்.**

ஆக, அல்லாஹ்வின் இந்த கூற்றின் அடிப்படையில் முதல் படித்தரம் என்னவென்றால், மனிதன் இவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டும். மேலும் எல்லா விதமான பாவங்களிலிருந்தும் அது கண்களிலிருந்து வெளிப்பட்டாலும் சரி; அல்லது காதுகளினால் வெளிப்பட்டாலும் சரி; அல்லது கைகள் அல்லது கால்களிலிருந்து வெளிப்பட்டாலும் சரி. மேலும் எந்த உறுப்பிலிருந்தும் பாவம் வெளிப்பட்டாலும் அதிலிருந்து தப்பிக்க வேண்டும். ஏனென்றால் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهِ عِلْمٌ إِنَّ السَّمْعَ وَالْبَصَرَ وَالْفُؤَادَ كُلُّ أُولَٰئِكَ كَانَ عَنْهُ مَسْئُولًا

**அதாவது எதைப் பற்றிய அறிவு இல்லையோ தேவையில்லாமல் அதனைப் பின்பற்றாதீர்கள். ஏனென்றால், காது, கண் மற்றும் உள்ளம் மேலும் உடலின் எல்லா உறுப்புகளிடமும் கேள்வி கேட்கப்படும். மரணித்த பிறகு இறைவனிடம் மனிதன் செல்லும் போது இவற்றிடம் கேள்வி கேட்கப்படும்.**

**அன்னார் கூறுகின்றார்கள்: பெரும்பாலான தீமைகள் தவறான எண்ணத்தினாலேயே ஏற்படுகின்றன. எவரைப் பற்றியாவது ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்ட உடனேயே அதை ஆராய்ந்து பார்க்காமல் அப்படியே நம்பி விடுவது மிகத் தவறான விஷயமாகும். எந்த விஷயத்தைப் பற்றி சரியான ஞானம் இல்லையோ அந்த விஷயத்திற்கு உள்ளத்தில் இடமளிக்காதீர்கள். இது தவறான எண்ணத்தை விலக்குவதற்காகவே ஆகும். எப்போது வரை சரியான முறையில் ஆராயவில்லையோ அப்போது வரை அப்படிப்பட்ட விஷயத்திற்கு உள்ளத்திலும் இடமளிக்காதீர்கள். உங்களது நாவுகளிலும் அதைப் பயன்படுத்தாதீர்கள்.**

அன்னார் கூறினார்கள்: பாருங்கள்! இது எத்தகைய வலுவான கூற்றாக இருக்கின்றது. பெரும்பாலான மக்கள் தமது நாவினால் பிடிக்கப்படுவர். ஆக, **தவறான எண்ணம் நீங்கி விட்டாலே நமது சமூகத்திலுள்ள பாதிக்கும் அதிகமான சண்டைகள், குழப்பங்கள் நீங்கி விடும். ஒன்றுமை ஏற்பட்டு விடும். ஒறுமைப்பாடு ஏற்பட்டு விடும்.**

அன்னார் கூறுகின்றார்கள்: உலகத்திலும் கூட பெரும்பாலான மக்கள் தமது நாவின் காரணமாக பிடிக்கப்படுகின்றனர். மேலும் அவர்களுக்குப் பெரும் நஷ்டத்தை மேற்கொள்ள வேண்டி வருகின்றது. தலைகுனிவை தாங்க வேண்டியது வருகின்றது. ஒரு விஷயத்தைக் கூறி, அந்த விஷயம் உண்மையில்லை என்றால் வெட்கப்பட வேண்டியது வருகின்றது. எனவே **நீங்கள் தவறான எண்ணத்தை உருவாக்கிக் கொள்ளாதீர்கள். மற்றவர்கள் தொடர்பாக நல்லெண்ணம் கொள்ளுங்கள். அல்லது ஏதாவதொரு விஷயத்தைக் கேட்டால் அதைப் பற்றி தீர ஆராயுங்கள்.**

**மனிதன் பலவீனமானவனாவான். சில விஷயங்கள் உள்ளத்தில் வந்து விடுகின்றன. ஆனால், அதன்படி செயல்படவில்லை என்றால் அல்லாஹ் மன்னித்து விடுகின்றான். உள்ளத்தில் எண்ணம் உருவாவதால் மட்டும் அல்லாஹ் பிடிப்பதில்லை. மாறாக, அதன்படி செயல்படுவதனால் தான் பிடிக்கப்படுகின்றது.**

அல்லாஹ் எவ்வாறு பிடிக்கின்றான் என்பதைப் பற்றி எடுத்துக்கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: உள்ளத்தில் ஏற்படக்கூடிய பொதுவான விஷயங்களுக்கு எவ்வித பிடியும் கிடையாது. உதாரணமாக, எவரது உள்ளத்திலாவது இந்த செல்வம் எனக்குக் கிடைத்து விட வேண்டும். அது கிடைத்து விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றினால் நிச்சயமாக இது ஒருவகையான பேராசையாக இருந்தாலும் பொதுவாக உள்ளத்தில் இது வந்துவிட்டு பிறகு சென்று விட்டால் இதற்கு எவ்வித பிடியும் கிடையாது.

ஆனால் இத்தகைய எண்ணத்திற்கு உள்ளத்தில் இடமளித்து, ஏதாவது சூழ்ச்சி செய்து, தவறான முறையில் அந்த செல்வத்தை அடைய வேண்டும் என்று முயற்சி செய்தால் அல்லது நான் இவ்வளவு Tax செலுத்த வேண்டும். அதில் இவ்வளவு குறைத்தால் எனக்கு மிச்சம் ஏற்படும் என்ற எண்ணம் வருவதால் மட்டும் இறைவன் பிடிப்பதில்லை. ஆனால் அதன்படி செயல்பட்டால், Tax செலுத்தவில்லை என்றால், அரசாங்கத்திற்கு இழப்பை ஏற்படுத்தினால், அல்லது உண்மையை எடுத்துரைக்காமல் தனது சந்தாவில் வருமானத்தை குறைவாக எழுதினால் பிறகு அல்லாஹ் பிடிக்கின்றான்.

இப்படிப்பட்ட பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. பல மக்களது உதாரணங்கள் இருக்கின்றன. இத்தகையவர்களது வருமானமும் மெதுமெதுவாக குறைந்து விடுகின்றது. மேலும் தனக்கு என்ன வருமானம் என்று அவர்கள் குறிப்பிட்டார்களோ அந்த வருமானத்திற்கே அவர்களது நிலையும் வந்து விடுகின்றது. இவ்வாறு அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமையிலும், அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய உரிமையிலும் அதே நிலைக்கு அவர்கள் வந்து விடுகின்றனர்.

அன்னார் கூறினார்கள்: பிறகு இந்த பாவம் பிடிக்கப்படுவதற்கு போதுமானதாக இருக்கின்றது. **உலகியல் ரீதியாக வியாபாரம் செய்யக்கூடிய மக்கள் ஏதாவதொரு பொருளை அடைய உள்ளத்தால் அவர்கள் உறுதி கொண்டு அதனை நிறைவேற்ற திட்டங்களை வகுக்கின்றனர். சூழ்ச்சிகளைச் செய்கின்றனர். இவ்வாறு செய்தால் பிறகு இந்த பாவம் பிடிக்கப்படுவதற்குப் போதுமானதாக இருக்கின்றது.** ஆக இப்படிப்பட்ட பாவங்கள் மிகவும் குறைவாகவே கவனமாகப் பார்க்கப்படுகின்றன. மேலும் இது மனிதனின் அழிவிற்குக் காரணியாக அமைந்து விடுகின்றது. பெரிய பெரிய பாவத்திலிருந்து பெரும்பாலானவர்கள் விலகியே இருக்கின்றனர்.

அன்னார் கூறினார்கள்: பெரும்பாலான மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் அவர்கள் தற்போது வரை எந்த கொலையும் செய்ததில்லை. எதையும் அவர்கள் அபகரித்தது கிடையாது. திருடியது கிடையாது. கொள்ளையடித்தது கிடையாது. இது போன்ற வேறு எந்தவொரு மிகப்பெரிய பாவத்தையும் அவர்கள் செய்தது கிடையாது. ஆனால் கேள்வி என்னவென்றால், **அப்படிப்பட்ட மக்களில் மற்றவரைப் பற்றி புறம்பேசாமல் இருப்பவர்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? முதுகுக்குப் பின்னால் புறம்பேசாமல் இருக்கக்கூடிய, தப்பெண்ணம் கொள்ளாத, அப்படிப்பட்ட மக்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? அல்லது தனது சகோதரனை இழிவுபடுத்தி அவருக்கு துக்கம் விளைவித்திராத, எவருக்கும் மனரீதியாக துக்கத்தை தந்திராத, அல்லது பொய் பேசி தவறிழைக்காதவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்?** பொய்யிலும் பல வகைகள் இருக்கின்றன. அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களிடம் சிறிதளவு கூட பொய் பேசக்கூடாது. உங்களது எல்லா விஷயங்களிலும் உண்மை இருக்க வேண்டும் என்று கூறியுள்ளான்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஆக, **இத்தகைய மக்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள்? என்னால் உறுதியாகக் கூற முடியும். இந்த விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடிய, எவரைப் பற்றியும் குற்றஞ்சாட்டாமல் இருக்கக்கூடிய, எவருக்கும் துக்கத்தை கொடுத்திராத, தப்பெண்ணம் கொள்ளாத, பொய் பேசாத, உள்ளத்தில் தீய எண்ணத்தை கொண்டிராத மேலும் இறைவனை அஞ்சக்கூடிய இத்தகைய மக்கள் மிகக் குறைவாகவே இருப்பர். மேலும் இந்த மக்கள் இறைவன் மீது கொண்டிருக்கின்ற அச்சத்தின் காரணமாக இதனை செய்வதில்லை.**

அன்னார் கூறுகின்றார்கள்: இல்லையென்றால், இப்படிப்பட்ட மக்கள் அதிகம் அதிகமாகவே கிடைப்பார்கள். அதாவது அவர்கள் பெரும்பாலும் பொய் பேசக்கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் **எல்லா நேரமும் அவர்களது சபைகளில் மற்றவர்களைப் பற்றி குற்றஞ்சாட்டுதலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் எல்லா வகையிலும் தனது பலவீனமான சகோதரருக்கு அவர்கள் துக்கத்தை தருகின்றனர்.**

**இப்போது நாம் சுயமே நமது சபைகளை ஆய்வு செய்து பார்ப்போமேயானால் நமது சபைகளில் மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசப்படுவதையும், சின்னஞ்சிறு விஷயங்களைக் கூட பெரிதாக்கி அதை எள்ளி நகையாடுவதையும் நாம் பார்க்கின்றோம். இதன் விளைவாக பகைமையும் உருவாகின்றது. ஆக, இந்த தீமைகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதே நன்மையின் படித்தரமாகும். இதுவே ஒரு நம்பிக்கையாளரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது.**

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: அல்லாஹ் கூறுகின்றான். முதல் படித்தரம் என்னவென்றால், மனிதன் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: தீய பணிகள் என்ன என்பதை நான் இப்போது விளக்கமாகக் கூற முடியாது. திருக்குர்ஆனில் ஆரம்பம் முதல் இறுதி வரை இறைக் கட்டளைகள் இருக்கின்றன. எந்த பணிகளைச் செய்ய வேண்டும். எந்த பணிகளைச் செய்யக்கூடாது. அது பற்றிய விவரங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. ஆக, ஒரு நம்பிக்கையாளர் திருக்குர்ஆனைப் படிக்க வேண்டும். மேலும் அதனைப் புரிய வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: கட்டளைகள் தொடர்பாகத் திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான விஷயங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சுருக்கமாக, நான் இதனையே கூற விரும்புகின்றேன். அதாவது **பூமியில் குழப்பம் விளைவிப்பதை இறைவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அல்லாஹ் உலகத்தில் ஒற்றுமையைப் பரப்ப விரும்புகின்றான். ஆனால் எவர் ஒருவர் தனது சகோதரனுக்கு துக்கத்தை இழைக்கின்றார், அநீதி இழைக்கின்றார், ஏமாற்றுகின்றார் என்றால் அப்படிப்பட்டவர் ஒருமைப்பாட்டிற்கு எதிரி ஆவார். இதன் மூலமாக உலகத்தில் ஒற்றுமை ஏற்பட முடியாது. அன்பும், சகோதரத்துவமும் இதனால் ஏற்பட முடியாது.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்படிப்பட்ட நபர் ஒருமைப்பாட்டிற்கு எதிரியாக இருக்கின்றார். எப்போது வரை இந்த தீய எண்ணங்கள் உள்ளத்திலிருந்து விலகவில்லையோ அப்போது வரை உண்மையான ஒருமைப்பாடு பரவும் என்பது சாத்தியமில்லாததாகும். எனவே தான் இந்த படித்தரத்தை முதன்மையாக வைத்துள்ளான்.

**ஒரு ஜமாஅத்தாக இருப்பதில் தான் பரக்கத் இருக்கின்றது. அதன் மூலம் ஒருமைப்பாடு உருவாக வேண்டும். ஒற்றுமை ஏற்பட வேண்டும். இந்த நோக்கமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமாகும். அதாவது முஸ்லிம்களை ஒரு கையில் ஒன்றிணைப்பதும், அவர்களை ஒரே சமுதாயமாக ஆக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே வாக்களிக்கப்பட்ட மஹ்தி வர வேண்டியதிருந்தது.**

அன்னார் கூறுகின்றார்கள்: பெரும்பாலான மக்கள் ஒரு சபையில் அமர்ந்து இவ்வாறான விஷயங்களைக் கேட்பதால் அவர்களது உள்ளமும் அதன் தாக்கத்திற்கு ஆளாகின்றது. மேலும் அதை அவர்கள் சிறந்ததாகவும் கருதுகின்றனர். ஆனால் அந்த சபையிலிருந்து அதாவது கூறப்பட்ட நன்மையான விஷயங்களைக் கேட்பதால் மேலும் தற்போது கொடுக்கப்படுகின்ற குத்பாவை மக்கள் உட்கார்ந்து கேட்கின்றனர். அதனால் அவர்களது உள்ளத்திலும் தாக்கம் ஏற்படுகின்றது. பெரும்பாலான மக்களுக்கு அதன் தாக்கம் ஏற்படுகின்றது. அதை அவர்கள் எனக்கு எழுதவும் செய்கின்றனர்.

ஆனால் இந்த சபைகளிலிருந்து அவர்கள் தனியாக சென்ற பிறகு, மேலும் தமது நண்பர்களை சந்திக்கும் போது மீண்டும் அந்த பழைய நிறமே அவர்களிடம் ஏற்பட்டு விடுகின்றது. மேலும் எந்த நன்மையான விஷயங்களைக் கேட்டு விட்டு வந்தார்களோ அவற்றை முற்றிலும் மறந்து விடுகின்றனர். எனவேதான் நான் கூறுகின்றேன். இந்த விஷயங்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறப்பட வேண்டும். மேலும் நமக்கு முன்பாக அது இருக்க வேண்டும். அதாவது அவ்விஷயங்களை மறப்பதற்கு முன்பாக மீண்டும் நினைவூட்டப்பட்டிருக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: **எந்த சபைகளில் இப்படிப்பட்ட விஷயங்கள் பேசப்படுகின்றனவோ அதிலிருந்து விலகி இருப்பது அவசியமாகும்.** மேலும் இந்த அனைத்து தீய விஷயங்களுக்குரிய பிரதிபலனும் என்ன என்பதைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு விஷயம் தீமையானது என்பதற்கு அதனைப் பற்றிய அறிவு இருப்பது முதலில் அவசியமாகும். அதாவது ஏதாவதொரு பொருளின் மீது ஒரு மனிதர் ஆசைப்படுகின்றார். அதை அடைய விரும்புகின்றார் என்றால் முதலில் அது என்ன பொருள்? அது நன்மையானதா? அல்லது தீமையானதா? என்பது பற்றிய அறிவு அவருக்கு இருக்க வேண்டியது அவசியமாகும். நல்லது மற்றும் தீயது ஆகியவற்றைப் பற்றிய அறிவு இருக்க வேண்டும். இதன் மூலமாக தீமையான விஷயம் என்றால் அதனை விட்டு விட வேண்டும். நன்மையான விஷயமென்றால் அதை நாம் மேற்கொள்ள வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: **எப்போது வரை ஒரு பொருளைப் பற்றி அறிவு இருப்பதில்லையோ அதை எவ்வாறு பெற முடியும்? திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் விளக்கமாக கூறியுள்ளது. எனவே திருக்குர்ஆனைப் படியுங்கள். திருக்குர்ஆனைப் படியுங்கள். மேலும் தீய பணிகளை நீங்கள் விரிவாக எழுதிக் கொண்டே செல்ல வேண்டும். மேலும் இறைவனது அருள் மற்றும் உதவியின் மூலமாக இந்த தீமையிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். இது இறையச்சத்தின் முதல் படித்தரமாகும்.**

தீமையிலிருந்து தப்பிப்பதற்கு நீங்கள் இப்படிப்பட்ட முயற்சியை செய்வீர்கள் என்றால் அல்லாஹ்வும் உங்களுக்குத் தப்பிப்பதற்கான நற்பாக்கியத்தை வழங்குவான். மேலும் அவன் உங்களுக்கு கற்பூர பானத்தை வழங்குவான். அதன் மூலமாக உங்களிடம் இருக்கின்ற பாவத்தின் உணர்வுகள் முற்றிலுமாக குளிர்ந்து விடும்.

கற்பூரம் தொடர்பாக இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது உணர்வுகளை குளிரச் செய்வதற்கு அது பயன்படுத்தப்படுகின்றது. மக்கள் இதனை செய்கின்றனர். மருந்துகளிலும் இதனைப் பயன்படுத்துகின்றனர். இங்கு ஆன்மீக நோய்க்கும் அன்னார் இதனை உதாரணமாக கூறியுள்ளார்கள். அதாவது தீமையிலிருந்து தப்பிப்பதனால் அது உங்களுக்கு கற்பூர பானமாக ஆகி விடும். இதன் மூலமாக உங்களது பாவங்கள் மெது மெதுவாகக் குளிர்ந்து விடும். முடிவு பெற்று விடும். அதன் பிறகு நன்மைகளே வெளிப்படும். எப்போது வரை மனிதன் இறையச்சமுடையவராக ஆகுவதில்லையோ அப்போது வரை இந்த பானம் அவருக்குக் கொடுக்கப்படுவதில்லை. மேலும் அவரது இறைவணக்கம் மற்றும் துஆக்கள் ஏற்றுக் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. **இறைவணக்கத்தையும், துஆவையும் ஏற்கச் செய்ய வேண்டுமென்றால், மிகவும் அடிப்படையான விஷயம் மனிதன் தீமைகள் செய்வதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் நன்மையான காரியங்களை மேற்கொள்ள வேண்டும். இதுவே இறையச்சமாகும். துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது அடிப்படையான விஷயமாகும்.**

ஏனென்றால் அல்லாஹ் கூறுகின்றான். إِنَّمَا يَتَقَبَّلُ اللّٰهُ مِنَ الْمُتَّقِيْنَ அதாவது நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவரது இறைவணக்கத்தையே ஏற்றுக் கொள்கின்றான் (5:32). இது முற்றிலும் உண்மையான விஷயமாகும். அதாவது இறையச்சமுடையவரது தொழுகையும், நோன்புமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த இறைவணக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது என்பது என்ன?

இதனை விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: தொழுகை ஏற்றுக் கொள்ளப்படுவது என்பது தொழுகையின் தாக்கமும் அதன் அருட்களும் தொழுபவரிடத்தில் உருவாகி விட்டது என்பதே ஆகும். மேலும் எப்போது வரை அந்த அருட்களும், தாக்கமும் உருவாகவில்லையோ அப்போது வரை அது வெறும் குனிந்து எழுவது மட்டுமே ஆகும்.

அன்னார் கூறினார்கள்: **பள்ளிவாசலில் தொழுத பிறகு அங்கேயே இன்னொரு நபரைப் பற்றி புறங்கூறுவதனாலும், குற்றஞ்சாட்டுவதனாலும் அத்தகைய தொழுகை மற்றும் நோன்பினால் என்ன பயன் ஏற்படப் போகிறது?** நமது தொழுகையும் நோன்பும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதா? என்பதை எவ்வாறு நாங்கள் அறிவது என்று மக்கள் கேட்கின்றனர். ஆனால், அதற்குரிய அடையாளம் என்னவென்றால், தொழுகை மற்றும் இறைவணக்கத்திற்குப் பிறகு நீங்கள் பார்க்க வேண்டும்.

அதாவது நாம் ஒவ்வொரு பெரிய மற்றும் சிறிய தீமைகள் நம்மை விட்டு விலகிச் செல்கின்றதா என்று பார்க்க வேண்டும். மற்றும் அதன் மீது வெறுப்பு ஏற்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். நம்மிடத்தில் நன்மைகள் செய்வதற்கான கவனம் ஏற்படுகின்றதா என்று பார்க்க வேண்டும். உண்மையின் பக்கம் நமது பாதங்கள் முன்னேறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அவ்வாறில்லையென்றால் அதன் பொருள் என்னவென்றால் அத்தகைய தொழுகைகள் வெறும் குனிந்து எழுவது மட்டுமே ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: **பள்ளிவாசலில் தொழுது விட்டு அங்கேயே இன்னொருவரைப் பற்றி புறங்கூற ஆரம்பித்து விடுகின்றனர். தப்பெண்ணத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். தவறான விஷயங்களைப் பேச ஆரம்பித்து விடுகின்றனர். நம்பிக்கை துரோகம் செய்கின்றனர். சபைகளும் அமானம் ஆகும். மேலும் குறிப்பாகப் பொறுப்பாளர்கள் இந்த விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தமது ஜமாஅத் சபைகளில் பேசப்பட்ட விஷயங்களைத் தமது வீடுகளிலும், தேவையில்லாத நபரிடமும் கூற வேண்டிய அவசியம் கிடையாது. இந்த விஷயத்தைப் பின்பற்றி நடக்க வேண்டும்.** பல குழப்பங்கள் இதன் காரணமாகவே ஏற்படுகின்றன. அதாவது அமானத்தான விஷயங்கள் வெளியில்

வருகின்றன. இதன் காரணமாக ஒருவரது அந்தஸ்தின் மீது பொறாமை கொள்கின்றனர். ஒருவருடைய கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுக்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இத்தகைய பாவங்களில் மூழ்கி இருப்பதனால் தொழுகை அவர்களுக்கு என்ன பயனைத் தந்தது? **பெரும்பாலான இளைஞர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் எழுதுகின்றனர். எனக்கும் தனிப்பட்ட முறையில் தெரிய வருகின்றது. அதாவது சில பொறுப்பாளர்கள் மற்றும் தமது பெரியவர்களின் சில விஷயங்களைப் பார்த்து முதலில் ஜமாஅத்திலிருந்து அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக விலகிச் சென்றனர். பிறகு பள்ளிவாசலுக்கு வருவதிலிருந்து விலகிச் சென்றனர். பிறகு இறை வணக்கத்திலிருந்து விலகிச் சென்றனர். பிறகு அல்லாஹ்வை விட்டும் அவர்கள் விலகிச் சென்று விடுகின்றனர். எனவே இத்தகைய தொழுகைகள் தொழுபவருக்கு மட்டும் எவ்வித பலனைத் தருவதில்லை. மாறாக, சில மக்களுக்கு அது நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றது.**

எனவே நீங்கள் வருங்கால தலைமுறையை பாதுகாக்க வேண்டுமென்றால் முதலில் பொறுப்பாளர்களும், பெரியவர்களும் தங்களிடத்தில் இறையச்சத்தை உருவாக்க வேண்டியது அவசியமாகும்.

அன்னார் கூறினார்கள்: நம்பிக்கையாளராக ஆக விரும்புகின்ற அத்தகைய நபருக்கு இது முதல் படித்தரமாகும். அது என்னவென்றால், தீய செயல்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். அதுவே இறையச்சமாகும்.

இன்னோர் சந்தர்ப்பத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: பெரிய பெரிய தீமைகளை விட்டு விலகி இருப்பது மட்டும் இறையச்சம் கிடையாது. மாறாக நுட்பமான தீமைகளிலிருந்தும் விலகி இருப்பதே இறையச்சமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உதாரணமாக, **எள்ளி நகையாடக்கூடிய, பரிகாசம் செய்யக்கூடிய சபைகளில் அமர்வது மற்றும் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலைப் பற்றி ஏளனமாகப் பேசப்படுகின்ற சபைகளில் அமர்வது, அல்லது தனது சகோதரனின் கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்தப்படுகின்ற அத்தகைய சபைகளில் அமர்வது, அவ்வாறு அமர்பவர்கள் அவர்கள் கூறுகின்ற விஷயங்களுக்கு ஆமாம் போடவில்லை என்றாலும் அல்லாஹ்வின் பார்வையில் இது தீமையாகும்.**

**இப்படிப்பட்ட சபைகளில் அமர்ந்து இத்தகைய மக்களின் கூற்றைக் கேட்பதும் கூட அல்லாஹ்வின் பார்வையில் தீமையாகும். அவர்கள் அந்த சபைகளில் எதுவும் பேசாமல் இருந்தாலும் அந்த சபையில் கூறப்பட்ட விஷயங்களை அவர்கள் ஏன் செவியுற்றார்கள்? இந்த விஷயங்களைக் கேட்பது எவர்களது உள்ளத்தில் நோய் இருக்கின்றதோ அவர்களது பணியாகும்.**

ஏனென்றால், அவர்களது உள்ளம் தீமையை விரும்பாததாக இருந்திருக்குமென்றால் பிறகு ஏன் அவர்கள் அவ்வாறு செய்தார்கள். பிறகு ஏன் இத்தகைய சபைகளுக்குச் சென்று இப்படிப்பட்ட விஷயங்களைச் செவியுற்றார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: **இதையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது இப்படிப்பட்ட விஷயங்களைக் கேட்பவரும், பேசக்கூடியவரைப் போன்றவரே ஆவார். எவர்கள் நாவினால் இவ்விஷயங்களைக் கூறுகின்றனரோ அவர்களும் நிச்சயமாக கேள்வி கணக்கின் கீழ் வருகின்றனர். அவர்கள் வெளிப்படையாகவே தண்டனைக்குக் கீழ் வந்து விடுகின்றனர். ஏனென்றால் அவர்கள் பாவத்திற்கான செயலைச் செய்துள்ளனர். ஆனால் எவர்கள் அமைதியாக இருந்து கொண்டு அமர்ந்திருந்தார்களோ அவர்களும் இந்த பாவத்திற்கு ஆளாகின்றனர். அவர்களும் குற்றவாளியாக ஆகி விடுகின்றனர். அவர்களுக்கும் அதற்குரிய தண்டனையைப் பெற வேண்டியது வரும்.**

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த கருத்தை மிகவும் கவனமாக நினைவில் வையுங்கள். திருக்குர்ஆனை மீண்டும் மீண்டும் படித்து அதனைச் சிந்தியுங்கள். ஏனென்றால் இது அல்லலாஹ்வின் கட்டளையாகும். எனவே இது அதிகமாக நினைவில் வைக்க வேண்டிய ஒன்றாகும்.

**ஆக, தவறான விஷயங்களைச் செவியேற்று அமைதியாக அமர்ந்திருப்பவர்கள் எத்தகைய மக்கள் என்றால் அவர்கள் அதில் ஓர் இன்பத்தைப் பெற வேண்டி அதைக் கேட்கின்றனர். அவர்களும் அல்லாஹ்விடம் பதில் கூற வேண்டியது வரும்.**

மேலும் இவ்விஷயத்தை விளக்கிக் கூறியவாறு அன்னார் கூறினார்கள்: ஒரு நம்பிக்கையாளர் அவர் ஒரு தீமையும் செய்யவில்லை என்பதனால் மட்டும் மகிழ்ச்சியடைந்து விடுவதில்லை. மாறாக, இத்தகைய தீய செயல்களை மற்ற மார்க்கம் மற்றும் சமுதாயத்தைச் சார்ந்த கண்ணியமிக்க பெரும்பாலான மக்கள் கூடச் செய்வதில்லை.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்துக்களிலும், கிறிஸ்தவர்களிலும் மற்றும் இதர சமுதாயங்களிலும் சில மக்கள் இருக்கின்றனர். அவர்கள் சில தீமைகளைச் செய்வதில்லை. உதாரணமாக, சிலர் பொய் பேசுவதில்லை. எவரது செல்வத்தையும் அபகரிப்பதில்லை. மேலும் கடனை அபகரிப்பதில்லை. மாறாக, திரும்பி செலுத்துகின்றனர். சமூகத்தில் அவர்களது விவகாரங்கள் சரியானதாக இருக்கின்றது. ஆனால் அல்லாஹ் கூறுகின்றான். தீமையிலிருந்து விலகி இருப்பதனால் மட்டும் அவன் திருப்தியடைவதில்லை. இதற்கு மாற்றமாக நன்மை செய்ய வேண்டும்.

நான் தீமை செய்வதில்லை என்று பெருமை கொள்பவர் அறிவீனர் ஆவார். இஸ்லாம் மனிதனை இந்த படித்தரம் வரை மட்டும் கொண்டு செல்லவில்லை. மாறாக, அது இரண்டு உரிமைகளையும் முழுமை செய்ய விரும்புகின்றது. அதாவது தீமைகளை விட்டு விட வேண்டும். மேலும் நன்மைகளைக் கலப்பற்ற முறையில் செய்ய வேண்டும். எப்போது வரை இந்த இரண்டு விஷயங்களும் இருப்பதில்லையோ அப்போது வரை இரட்சிப்பு கிடைக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 371–378 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறுகின்றார்கள்: **நான் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகின்றேன். அதாவது நீங்கள் இறையச்சத்திலும், தூய்மையிலும் முன்னேற்றமடையுங்கள். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வும் உங்களுடன் இருப்பான்.**

اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ அதாவது இறையச்சத்தை மேற்கொள்பவர்கள், நன்மைகளைச் செய்யக் கூடியவர்கள், பேருபகாரம் செய்யக் கூடியவர்களுடன் இறைவனது உதவி இருக்கும் என்று கூறுகின்றான்.

அன்னார் கூறினார்கள்: **நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறையச்சத்தை மேற்கொள்ளவில்லையென்றால், இறைவன் விரும்புகின்ற அந்த நன்மையில் நீங்கள் பெரும் பங்கு வகிக்கவில்லை என்றால் அல்லாஹ் உங்களையே முதலில் அழிப்பான். ஏனென்றால், நீங்கள் ஓர் உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். ஆனால் பிறகு அதன்படி செயல்படுவதை மறுத்து விட்டீர்கள். அதாவது காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்.**

**அந்த வாதம் என்ன? அந்த வாதம் என்னவென்றால், நங்கள் மற்ற முஸ்லிம்களை விட சிறந்தவர்கள் ஆவோம். மேலும் நன்மையின் வழிகளில் நடக்கக் கூடியவர்களாவோம் என்பதாகும். ஆனால் செயலின் மூலமாக அந்த இறையச்சம் இல்லை என்றால் அதிலிருந்து மறுப்பே தென்படுகின்றது. பைஅத் செய்து விட்டோம் என்ற இந்த விஷயத்தின் மீது மட்டும் ஒருபோதும் நம்பிக்கையும், பெருமையும் கொள்ளாதீர்கள். எப்போது வரை முழுமையான இறையச்சத்தை மேற்கொள்ளவில்லையோ அப்போது வரை ஒருபோதும் நீங்கள் தப்பிக்க முடியாது. இறைவனுக்கு எவரோடும் எந்த உறவும் கிடையாது.** நமது எதிரிகளும் கூட அவனது படைப்பினங்களாகவே இருக்கின்றனர். நீங்களும் அவனது படைப்பினங்களாகவே இருக்கின்றீர்கள். **எப்போது வரை உங்களது சொல்லும் செயலும் ஒன்று போல் இருக்காதோ அப்போது வரை வெறும் கொள்கை அளவிலான விஷயங்கள் மட்டும் எவ்வித பயனையும் தராது.**

கொள்கையைப் பொருத்தவரை மற்ற முஸ்லிம்களும், இறைவன் ஒருவனே என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியாவாக இருக்கின்றார்கள் என்றும், திருக்குர்ஆன் ஷரீஅத்துடைய இறுதி வேதம் என்றும் ஏற்றுக் கொள்கின்றனர். இந்த கொள்கை நமது கொள்கையாக இருக்கின்றது. மேலும் அவர்களது கொள்கையும் இதுவாகவே இருக்கின்றது. ஆனால் சொல்லிலும் செயலிலும் முரண்பாடு இருக்குமென்றால் பிறகு வெறும் கொள்கை

மட்டும் எவ்வித பயனையும் தராது. உண்மையான விஷயம் அமல் செய்வதாகும். அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஆக, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வது மட்டும் போதுமானது கிடையாது. அஹ்மதியாக இருப்பது மட்டும் போதுமானது கிடையாது. தம்மைத்தாமே அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்வது அவசியமாகும். மேலும் அல்லாஹ் நம்மிடம் எதிர்பார்க்கின்ற வகையில் உண்மையான நம்பிக்கையாளராக ஆகுவது அவசியமாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் செயல் நடைமுறையைக் காட்டுவதையே விரும்புகின்றான். அதாவது செயல் நடைமுறையின் மூலமாக உண்மையை வெளிப்படுத்திக் காட்டுங்கள். அதன் மூலம் அவன் உங்களுடன் இருக்க வேண்டும். **கருணை, நல்லொழுக்கம், பேருபகாரம், சிறந்த நற்செயல்கள், அனுதாபம், பணிவு ஆகியவற்றில் ஏதும் குறைபாடு இருக்குமென்றால், பிறகு அத்தகைய ஜமாஅத் தான் முதலில் அழிவிற்கு உள்ளாகும் என்று நான் பல முறை எடுத்துக் கூறியுள்ளேன்.**

அன்னார் கூறுகின்றார்கள்: மூஸா (அலை) அவர்களது காலத்தில் அவர்களது சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இறைவனது கட்டளைக்கு எவ்வித கண்ணியமும் வழங்கவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் இருந்த போதிலும் அவர்கள் மின்னலின் மூலமாக அழிக்கப்பட்டார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 144–145 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறுகின்றார்கள்: **என்ன நீங்கள் எனது ஜமாஅத் என்பதனால் மட்டும் தப்பித்து விடுவீர்களா?**

பிறகு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது தொடர்பாக சஹாபாக்களின் உதாரணத்தை எடுத்துக் கூறி போதனை செய்வதவாறு அன்னார் கூறுகின்றார்கள்: உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது மற்றும் இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வது போன்றவைகள் ஒரு மனிதனிடத்தில் ஏற்படுவது என்பது சாதராண விஷயமல்ல.

அன்னார் கூறுகின்றார்கள்: சஹாபாக்கள் வெளிப்படுத்திக் காட்டிய அந்த முன்மாதிரி என்ன? இறைவனது வழியில் தமது உயிரை தியாகம் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமானார்கள். ஆக, **இறைவனது வழியில் இன்னுயிரை மாய்ப்பதற்கு ஆயத்தமாகுவது என்ற நிலையை மனிதன் தன்னிடத்தில் ஏற்படுத்திக் கொள்வது என்பது சாதாரண விஷயமல்ல.** ஆனால் சஹாபாக்களின் நிலைமைகள், அவர்கள் இந்த கடமையை நிறைவேற்றினார்கள் என்பதையே நமக்குக் காட்டுகின்றது. அவர்களுக்கு இந்த வழியில் இன்னுயிரை மாய்க்குமாறு கட்டளையிடப்பட்ட போது அவர்கள் மீண்டும் உலகத்தின் பக்கம் சாயவில்லை. ஆக உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது என்பது முக்கியமான விஷயமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 297 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இன்றைய நாட்களில் நான் பெரும்பான்மையான சஹாபாக்களின் வாழ்க்கை தொடர்பாக குத்பாக்களில் எடுத்துக் கூறி வருகின்றேன். வியக்கத்தக்க சம்பவங்கள் கிடைக்கின்றன. அவர்கள் எத்தகைய தியாகங்களை செய்யக் கூடியவர்களாக இருந்தனர். எத்தகைய நன்மைகளை அவர்கள் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். எந்த அளவுக்கு தங்களிடத்தில் இறையச்சத்தை உருவாக்கக் கூடியவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்களது இறைவணக்கத்தின் தரம் என்னவாக இருந்தது. எனவே தான் அவர்களது முன்மாதிரிகள் நம்முன் வர வேண்டும் என்பதால் இவற்றை நான் எடுத்துக் கூறுகின்றேன்.

இவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், **எனது இந்த சஹாபாக்கள் நட்சத்திரத்தைப் போன்றவர்கள் ஆவர். எவருக்குப் பின்னால் நீங்கள் சென்றாலும் அவர்கள் உங்களுக்கு நேரான வழியின் பக்கம் கொண்டு செல்வார்கள்** என்று கூறினார்கள்.

(மிர்காதுல் மஃபாதீஹ்... தொகுதி 11 பக்கம் 162 ஹதீஸ் எண் 6018 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சசடிக்கப்பட்டது)

எனவே இது நமக்கான சிறந்த முன்மாதிரியாகும்.

அன்னார் கூறினார்கள்: **எவருடைய நோக்கம் உலகமாக இருக்குமோ மேலும் அப்படிப்பட்டவர் இந்த ஜமாஅத்தில் இணைந்துள்ளார் என்றால் இறைவனது பார்வையில் அவர் இந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர் கிடையாது. அல்லாஹ்வின் பார்வையில் எவர் உலகத்தை முற்றிலுமாக துறந்து விடுகின்றாரோ அவரே இந்த ஜமாஅத்தில் இணைந்தவராக இருக்கின்றார்.**

இதைக்கூறி அன்னார் அதற்குரிய விளக்கத்தையும் கூறியுள்ளார்கள்: அதாவது **இறைவனது வழியில் செல்வதனால் நான் அழிந்து விடுவேன் என்று கருதாதீர்கள். கூறினார்கள்: இறைவனுக்காகவே ஆகிவிடுபவரை இறைவன் ஒருபோதும் வீணாக்குவதில்லை. மாறாக, அவனே அவர்களுக்கு போதுமானவனாக இருக்கின்றான். அல்லாஹ் கண்ணியத்திற்குரியவன் ஆவான். அவனுடைய வழியில் எவரொருவர் எதை இழந்தாலும் அவர் அதை பெறுகின்றார்.**

**நான் உண்மையாகவே கூறுகின்றேன். எவர்கள் இறைவனது கட்டளைகளை செயல்படுத்தக்கூடியவர்களாக இருக்கின்றார்களோ அவர்களையே அல்லாஹ் நேசிக்கின்றான். மேலும் அவர்களது குழந்தைகளே அருளுக்குரியதாக இருக்கின்றன. ஒருவர் உண்மையான முறையில் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவராக இருந்து அவரும் அவரது குழந்தைகளும் அழிந்தது கிடையாது. மேலும் அவ்வாறு நடக்கவும் செய்யாது.** இறைவனை விட்டு விட்டு, உலகத்தின் பக்கம் குனிந்திருப்பவர்களுக்கே அழிவு இருக்கின்றது. எல்லா விஷயங்களும் அல்லாஹ்விடமே இருக்கின்றது என்பது உண்மையில்லையா? அவனின்றி எந்த வழக்கும் வெற்றியடைவதில்லை. எந்த வெற்றியையும் பெற முடியாது. எந்தவொரு நிம்மதியும் அவனின்றி கிடைக்க இயலாது.

அன்னார் கூறுகின்றார்கள்: **செல்வங்கள் இருக்கலாம். எவருக்காவது செல்வங்கள் கிடைக்கலாம். ஆனால் எனது மரணத்திற்குப் பிறகு இந்த செல்வங்கள் எனது மனைவி மக்களுக்கு பயனளிக்கும் என்று எவராவது உறுதியாக கூற முடியுமா?** இப்படிப்பட்ட பல உதாரணங்கள் நம்முன் வருகின்றன. அவர்களது மரணத்திற்குப் பிறகு அந்த செல்வங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த விஷயத்தை சிந்தியுங்கள். உங்களிடத்தில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: இப்போது வரை ஜமாஅத்தையும் அஹ்மதியையும் புகழ்ந்து கூறப்பட்டு வருகின்றது. இது குறைகளை மூடி மறைப்பவன் என்ற இறைவனது பண்பானது இவற்றை செய்கின்றது. இறைவன் மூடி மறைக்கின்றான். ஆனால் எப்போது சோதனைகள் வருகின்றதோ அப்போது அவன் மனிதனை ஆடையில்லாத ஒருவனை போன்று ஒன்றுமற்றதாக ஆக்கிக் காட்டுகின்றது. அந்த நேரத்தில் உள்ளத்தில் இருக்கக்கூடிய அந்த நோய் தனது தாக்கத்தை ஏற்படுத்தி மனிதனை அழித்து விடுகின்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 297,298 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அந்த காலத்தின் நிலைமைகளைப் பற்றி அன்னார் எடுத்துக் கூறுகின்றார்கள். அந்த காலத்தில் இருந்த நன்மையின் தரமானது இன்றைய காலத்தில் இருப்பதை விட மிக அதிகமாகவே இருந்தது. ஆனால் அன்னாரது உள்ளத்தில் அப்போதும் ஒரு வேதனை இருந்தது. நமது நிலைமைகளை என்ன? நமது வாதம் என்ன? நமது நன்மையின் தரம் என்ன? என்பதைப் பற்றி இன்று சுயமே நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க முடியும்.

உண்மையான நம்பிக்கையாளர் யார் என்பதைப் பற்றி மேலும் விளக்கியவாறு அன்னார் கூறுகின்றார்கள்: **நினைவில் கொள்ளுங்கள். பைஅத் செய்த போது அவர் கூறியதைப் போன்று உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவரே இறைவனது பார்வையில் உண்மையான நம்பிக்கையாளரும், பைஅத்தில் இணைந்தவரும் ஆவார்.**

அன்னார் கூறுகின்றார்கள்: **உலக நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றார் என்றால் அவர் இந்த உடன்படிக்கையை முறிக்கின்றார். அப்படிப்பட்ட நபர் இறைவனது பார்வையில் குற்றவாளி ஆவார்.**

அன்னார் கூறுகின்றார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். மனிதனின் செயல் நிலைகள் சிறந்ததாக இல்லாமல் நாவால் கூறுவது எவ்வித பயனும் அளிக்காது. அது வெறும் வெற்று வாதமாகவே இருக்கும். உள்ளத்தில் நுழைந்துள்ள அந்த ஈமானே உண்மையான ஈமானாகும். மேலும் அது அவரது செயல்களின் மூலமாக அதை அழகுபடுத்திக் காட்டுகின்றது. உண்மையான ஈமான் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் மற்ற சஹாபாக்களில் காணப்பட்டதே ஆகும். ஏனென்றால், அவர்கள் இறைவனது வழியில் செல்வத்தையும், உயிரையும் கூட கொடுத்து விட்டார்கள். அதற்காக அவர்கள் கவலைப்பட்டது கிடையாது.

அன்னார் கூறுகின்றார்கள்: எனக்கு எப்போதும் இந்த எண்ணம் வருகின்றது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவத்தின் பிம்பம் உள்ளத்தில் ஏற்படுகின்றது. அது எத்தகைய அருளுக்குரிய சமுதாயமாக இருந்தது. மேலும் அன்னாரது பரிசுத்தத் தன்மை என்ற ஆற்றல் எவ்வளவு வலுவானதாக இருந்தது என்றால் அது அந்த சமுதாயத்தை அந்த உயர் தகுதி வரை கொண்டு சென்றது. சிந்தித்துப் பாருங்கள். அன்னார் அவர்களை எங்கிருந்து எங்கு கொண்டு சென்று விட்டார்கள்.

**அவர்களிடம் எப்படிப்பட்ட ஒரு நிலைமை ஒரு நேரத்தில் இருந்ததென்றால், தடுக்கப்பட்ட அனைத்து விஷயங்களையும் அவர்கள் தாயின் பாலைப் போன்று செய்து வந்தனர். திருடுவது, மது அருந்துவது, விபச்சாரம் புரிவது போன்ற எந்த தீமைதான் அவர்களிடம் காணப்படாமல் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள் மற்றும் நெருக்கம் மற்றும் தர்பிய்யத்தானது அவர்களிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்களது நிலைமைகளில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டதென்றால் பெருமானார் (ஸல்) அவர்களே அவர்களைப் பற்றி சாட்சி பகர்ந்தார்கள். அவர்களது நிலைமை வானவர்களைப் போன்று ஆகிவிட்டது. يَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ அதாவது அவர்களுக்கு கூறப்படுகின்றவற்றையே அவர்கள் செய்கின்றனர் என்ற கூற்றிற்கு அவர்கள் தகுதியானவர்களாக ஆகினர். அத்தகைய நிலையே சஹாபாக்களிடம் ஏற்பட்டது. அவர்களது உள்ளத்தின் ஆசைகள் முற்றிலுமாக நீங்கி விட்டது.**

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 296,297 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அன்னார் கூறுகின்றார்கள்: பைஅத் செய்த பிறகு ஓர் அஹ்மதி எவ்வாறு இருக்க வேண்டும்? ஜமாஅத்துடன் எவ்வாறு வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அன்னாரது காலத்தில் இவ்வாறு கூறினார்கள்: **எனக்குப் பிறகு கிலாஃபத் தொடர் ஆரம்பமாகும். அதோடு நீங்கள் ஒன்றிணைந்து இருக்க வேண்டும். மேலும் அந்த கிலஃபாத் உங்களுடன் நிரந்தரமாக இருக்கும் என்று அன்னார் கூறியுள்ளார்கள்.**

அன்னார் கூறுகின்றார்கள்: **எந்த கிளையின் தொடர்பு மரத்துடன் இருப்பதில்லையோ இறுதியில் அது காய்ந்து விழுந்து விடுகின்றது.** எந்த நபர் உயிருள்ள ஈமானைப் பெற்றுள்ளாரோ அவர் உலகைப் பொருட்படுத்துவதில்லை. உலகம் எப்படியாவது கிடைத்து விடும். ஆனால் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர் அருளுக்குரியவர் ஆவார். ஆனால் மார்க்கத்தை விட உலகத்திற்கு முன்னுரிமை வழங்கக்கூடியவர் மரணித்தவரைப் போன்றவர் ஆவார். அவர் ஒருபோதும் உண்மையான உதவியின் முகத்தைக் காணவே மாட்டார். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் போதுதான் இந்த பைஅத் உங்களுக்கு பயனளிக்கும். மேலும் இதில் முன்னேற்றம் அடைய முயற்சி செய்புங்கள்.

**பைஅத் என்பது இன்று நடப்பட்ட ஒரு விதையைப் போன்றதாகும். ஒரு விவசாயி விதையை விதைத்து அதை மட்டும் போதுமானதாக கருதி எல்லாம் சரியாகி விட்டது என்று கூறி கனிகளைத் தரத்தக்க எந்தவொரு கடமையையும் அவர் நிறைவேற்றவில்லை என்றால், நிலத்தை சரி செய்யவில்லை என்றால், நிலத்தில் உரத்தை முறையாக கவனிக்கவில்லை என்றால், அதனை முறையாக பாதுகாக்கவில்லை என்றால் பிறகு அந்த விவசாயி அவற்றிலிருந்து ஏதாவதொரு கனி கிடைக்கும் என்று நம்ப முடியுமா?**

இந்த இடமும் விவசாயத்திற்கான இடமாகும். இங்கும் பலர் புதிதாக வந்துள்ளனர். அகதிகளாகவும், அஸைலம் பெற்றுக் கொண்டும் இங்கு வந்துள்ளனர். கிராமப்புறத்திலிருந்தும் இங்கு வந்துள்ளனர். விதை விதைக்கப்பட்ட பிறகு அதனை சரியாக கண்காணிக்கவில்லை என்றால் அதில் கனிகள் கிடைப்பதில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே இங்கு புதிதாக வந்திருப்பவர்களிடம் நான் இது தொடர்பாக இதனை கூறுகின்றேன். அதாவது இங்கு அல்லாஹ் உங்களது நிலைமைகளை சிறந்ததாக ஆக்கியுள்ளான். மார்க்க சுதந்திரத்தை வழங்கியுள்ளான். இறைவணக்கத்தின் உரிமையை உங்களால் செலுத்த முடியும். சுதந்திரமாக உங்களது மார்க்கத்தை நீங்கள் வெளிப்படுத்த முடியும்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்திருக்கின்றவர்கள் மீது இது கடமையாகும். அதாவது உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக தமது முழு ஆற்றலையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் தனது வயலை சரியான முறையில் கண்காணிக்க மாட்டாரோ அவரது விவசாயம் நிச்சயமாக அழிந்து விடும். எனவே ஒருவகையான விதையை நீங்கள் இன்று நாட்டியுள்ளீர்கள்.

இது அன்னார் அன்று தனது முன்னால் இருந்தவர்களுக்கு எடுத்துக் கூறியதாகும். இன்று அந்த விஷயங்களுக்கு முன்னால் நாம் இருக்கின்றோம். நான் விதையை விதைத்துள்ளோம். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். எவருடைய பங்கில் என்ன இருக்கின்றது என்பதை இறைவனே நன்கறிவான். ஆனால் இந்த விதையை பாதுகாக்கக்கூடியவர். மேலும் அதில் முன்னேற்றம் பெறுவதற்காக துஆ செய்பவரே நற்பேறு பெற்றவர் ஆவார். உதாரணமாக, தொழுகையில் ஒரு விதமான மாற்றம் ஏற்பட வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 37,38 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

தொழுகையின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும். பள்ளிவாசலை கட்டி விட்டோம் என்பது மட்டும் போதுமானது அல்ல. மாறாக அதன் உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு அன்னார் ஜமாஅத்திற்கு செய்த மிகப்பெரிய அறிவுரையையும் நான் எடுத்துக் கூறுகின்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: பலவகையான ஷிர்க் மற்றும் மார்க்கத்திற்கு புறம்பான மேலும் பல தீமைகள் உருவாகி விட்டன. நான் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்று பைஅத்தின் போது செய்யப்படுகின்ற உடன்படிக்கையானது இறைவனுக்கு முன்னால் செய்யப்பட்ட உடன்படிக்கையாகும்.

மரணம் வரை இதில் நிலைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் பைஅத் செய்யவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் நிலைத்து நின்றால் அல்லாஹ் மார்க்கம் மற்றும் உலகத்தில் உங்களுக்கு பரக்கத் செய்வான். மார்க்கத்திலும் பரக்கத் செய்வான். உலகத்திலும் பரக்கத் செய்வான். அல்லாஹ்வின் விருப்பத்திற்கிணங்க முழுமையான முறையில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். **காலம் மோசமாக இருக்கின்றது. இறை தண்டனை இறங்கிக் கொண்டிருக்கின்றது. எவர் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப தம்மை ஆக்கிக் கொள்வாரோ அவரது செல்வம் மற்றும் அவரது குடும்பம் மற்றும் குழந்தைகள் மீது அவன் கருணை காட்டுவான்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாருங்கள். மனிதன் ரொட்டி சாப்பிடுகின்றான். எப்போது வரை பசி போகின்ற வரை அவர் உணவு உண்ண மாட்டாரோ அப்போது வரை அவரது பசி போகாது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 75 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

இறை தண்டனை தொடர்பாகவும் நீங்கள் பாருங்கள்.

அன்னார் கூறினார்கள்: இறை தண்டனை இறங்கிக் கொண்டிருக்கின்றது.

**இப்போது நாம் பார்க்கின்றோம். உலகத்தில் ஏற்பட்டுள்ள பூகம்பங்கள், புயல், இயற்கை சீற்றங்கள், பேரழிவுகள் கடந்த ஐநூறு ஆண்டுகளில் இல்லாத வகையில் ஏற்பட்டுள்ளன. அல்லது கடந்த நூறு வருடங்களில் இல்லாததைப் போன்று ஏற்பட்டுள்ளன. ஆக இதை புரிந்து கொள்வது அவசியமாகும். உலகவாதிகளால் இதை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் இறை தண்டனை இறங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 15-22 November 2018 Issue No. 46 & 47

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இந்த விஷயங்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பகிரங்கமாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். எனவே நாம் நமது சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் **உலகிற்கும், இந்த பேரழிவுகள் ஒரு சாதாரண பேரழிவு கிடையாது. இதனைப் பற்றி நூறு வருடங்களுக்கு முன்பே முன்னறிவிப்பு செய்யப்பட்டு விட்டது என்று நாம் எடுத்துக் கூற வேண்டும். இதிலிருந்து தப்பிப்பதற்குரிய ஒரே வழி மனிதன் இறைவன் பக்கம் வருவதே ஆகும். இப்போது கூட சிந்தித்து செயல்படவில்லை என்றால் பிறகு தப்பிக்க இயலாது.**

இவ்வாறே மனிதன் தனக்கே கஷ்டத்தை ஏற்படுத்தி வைத்துள்ளான். போர்கள் இருக்கின்றன. ஒருவர் மற்றவர் மீது அநீதி இழைக்கின்றார். இறைவனது பார்வையில் இந்த அநீதியின் எல்லையானது உச்சத்தை அடையும் போது பிறகு அந்த அநீதியிழைக்கின்ற சமுதாயங்களுக்கு அழிவு தான் ஏற்படும். அநீதிகள் உச்சத்தை அடைந்து விட்டதை நாம் பார்க்கின்றோம். ஆனால் அல்லாஹ் கால அவகாசம் கொடுக்கின்றான்.

ஆனால் அழிவு ஏற்படும் போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவிதைக்கிணங்க, **இது நெருப்பாகும். ஆனால் யார் அற்புதங்களைக் காட்டக்கூடிய அந்த இறைவனோடு அன்பு வைத்திருப்பார்களோ அவர்களே இந்த நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவர்.** ஆக அந்த நேரத்தில் அத்தகைய் மக்களே காப்பாற்றப்படுவர். (துர்ரே ஸமீன், உருது பக்கம் 154)

ஆக, இதன் பக்கம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். தம்மையும், உலகையும் காப்பாற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். மேலும் இதற்காக நமது முழு ஆற்றலையும், சக்தியையும் பயன்படுத்த வேண்டும். இறைவனை நாம் எவ்வாறு அடைய முடியும் என்பது பற்றி அன்னார் கூறுகின்றார்கள்:

மனிதன் ரொட்டியை சாப்பிடுகின்றான். எப்போது வரை வயிறு நிரம்பும் அளவிற்கு அவன் உண்ணவில்லையோ அப்போது வரை அவனது பசி நீங்காது. ஒரு துண்டு ரொட்டியை அவன் உண்டால் அல்லது சிறிதளவு உண்டால் அவனுக்கு பசியிலிருந்து இரட்சிப்பு கிடைக்குமா? ஒருபோதும் அல்ல. அவ்வாறே ஒரு துளி தண்ணீரை அவன் குடிப்பதாலும் அவனை ஒருபோதும் காப்பாற்ற முடியாது. மாறாக, அந்த அந்த துளி தண்ணீரினாலேயே அவன் மரணித்து விடுவான்.

அன்னார் கூறுகின்றார்கள்: உயிரை பாதுகாப்பதற்காக, எந்த அளவுக்கு உணவு உண்பதால் அவன் உயிரோடு இருக்க முடியுமோ அந்த அளவுக்கு அவன் உணவை உண்ணவில்லை அல்லது குடிக்கவில்லை என்றால் அவனால் தப்பிக்க முடியாது. ஒரு குறிப்பான அளவு உணவை உண்ணவில்லை என்றால் அப்போது வரை அவனது பசி நீங்காது. அவ்வாறே தண்ணீரும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குடிக்க வில்லை என்றால் அவரால் தப்பிக்க முடியாது.

இவ்வாறே மனிதனின் மார்க்க விஷயமும் இருக்கின்றது. எப்போது வரை அவனது மார்க்கம் சீராக ஆவதற்கான நிலையை அடையாதோ அப்போது வரை அவனால் தப்பிக்க இயலாது. மார்க்கம், இறையச்சம் மறறும் இறைவனது கட்டளைகளுக்கு கட்டுப்படுதல் ஆகியவை எந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்றால், எவ்வாறு உணவு உண்பதாலும், தண்ணீர் அருந்துவதாலும் ஒருவரது பசியும், தாகமும் நீங்குகின்றதோ அந்த அளவுக்கு இது இருக்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: **நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இறைவனது சில கூற்றுகளை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது அவனது எல்லா கூற்றுகளையும் விட்டு விடுவதைப் போன்றதே ஆகும். ஒரு பங்கு ஷய்த்தானுடையதும், ஒரு பங்கு அல்லாஹ்வுடையதாகவும் இருக்குமென்றால் அவன் அதனை விரும்புவதில்லை.**

**அவனது இந்த அமைப்பானது, மனிதன் இறைவன் பக்கம் வர வேண்டும் என்பதற்காகவே ஆகும். அவ்வாறு வருவது கடினமானதாக இருந்தாலும், அது ஒருவகையான மரணமாக இருந்தாலும் இறுதியில் வாழ்க்கை அதில் தான் இருக்கின்றது. எவர் தன்னிடத்திலிருந்து ஷைத்தானின் பங்கை தூக்கி எறிந்து விடுகின்றாரோ அந்த நபர் அருளுக்குரியவர் ஆவார். அவரது வீடு, ஆன்மா மற்றும் அவரது நகரம் ஆகிய அனைத்திலும் பரக்கத் சென்றடைகின்றது. ஆனால் அவரது பங்கில் சிறிதும் இருக்குமென்றால் பிறகு பரக்கத் ஏற்படாது. எப்போது வரை பைஅத் உடன்படிக்கையின் வெளிப்பாடு செயல் அளவில் இருக்காதோ அப்போது வரை பைஅத் எவ்வித பயனும் தராது.**

எவ்வாறு ஒரு மனிதனிடத்தில் நீங்கள் பல விஷயங்களை கூறினாலும் செயல் நடைமுறை மூலமாக எதுவும் செய்யாமலிருந்தால் அந்த நபர் மகிழ்ச்சியடைய மாட்டார். இவ்வாறே இறைவனோடுள்ள விவகாரமும் இருக்கின்றது. அவன் எல்லாரையும் விட அதிக தன்மானம் கொண்டவன் ஆவான்.

**ஒரு பக்கம் நீங்கள் அவனுக்கு கட்டுப்பட்டு நடந்து மறுபக்கம் அவனது எதிரிக்கும் நீங்கள் கட்டுப்பட்டு நடப்பதென்பது சாத்தியமா? இது நயவஞ்சகமாகும். மனிதன் எவரையும் பொருட்படுத்தக்கூடாது. உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவேன் என்ற உடன்படிக்கையில் மரணிக்கின்ற வரை நிலைத்திருக்க வேண்டும்.**

அன்னார் கூறுகின்றார்கள்: தீமையின் இரு வகைகள் இருக்கின்றன. ஒன்று இறைவனுக்கு இணை வைப்பது, அவனது மகிமையை அறியாமல் இருப்பது, அவனை வணங்குவது மற்றும் கட்டுப்பட்டு நடப்பதில் சோம்பேறித்தனம் காட்டுவது போன்றவை ஆகும். இரண்டாவது, அவனது அடியார்கள் மீது பரிவுடன் நடக்காமல் இருப்பது, அவர்களது உரிமைகளை செலுத்தாமல் இருப்பது போன்றவை ஆகும்.

இந்த இரண்டு வகையான தீமையையும் செய்யக்கூடாது. **இறைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதில் நிலைத்திருங்கள். பைஅத்தின் போது நீங்கள் செய்த உடன்படிக்கையில் நிலைத்திருங்கள். இறை அடியார்களுக்கு துக்கத்தை கொடுக்காதீர்கள். திருக்குர்ஆனை மிகவும் சிந்தித்து படியுங்கள். மேலும் அதன்படி செயல்படுங்கள். எல்லா விதமான எள்ளி நகையாடுதல், வீணான விஷயங்கள் மற்றும் இணை வைக்கின்ற சபைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஐவேளை தொழுகையை நிறைவேற்றுங்கள்.**

**எந்தவொரு இறை கட்டளையையும் நீங்கள் விட்டு விடக்கூடாது. உடலையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். எல்லா விதமான பகைமை, பொறாமை ஆகியவற்றிலிருந்து தூய்மையாக இருங்கள். இந்த விஷயங்களை தான் இறைவன் உங்களிடம் விரும்புகின்றான்.**

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 75,76 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நாம் பைஅத்தின் உரிமையை செலுத்தியவாறு நம்மிடத்தில் தூய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. மேலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாகவும், அன்னாரது கூற்றுகளின்படி செயல்படக் கூடியவர்களாகவும் நம்மை ஆக்குவானாக.

மேலும் பைஅத்தின் பத்தாவது நிபந்தனையான நல்ல விஷயங்களில் உங்களுக்கு கட்டுப்பட்டு நடப்போம் என்பதன் உண்மையான பொருளை புரிந்தவாறு கட்டுப்படுதலின் உயர் தரத்தை அடைபவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இதன் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாக்குறுதி அளித்துள்ள அல்லாஹ்வின் அருள்களுக்கு நாம் வாரிசாக வேண்டும்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad